# திருக்கோயில்




ஜனவரி

அருள்மிகு தேவிகருமாரி அம்மன், திருவேற்காடு

விலை

## திருச்சி உச்சிப்பிள்ளையார் திருக்கோயில்



புத்தாண்டு நல்வாழ்த்துகள்

திருக்கோயில் வாசகர்களுக்கு
இதயம் கனிந்த

**2003**

**புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாள்**
**நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**



# திருக்கோயில்




திங்கள் இதழ்

| | |
|---|---|
| தனி இதழ் | : ரூ. 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : ரூ. 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : ரூ. 1000.00 |

மாலை 45 திருவள்ளுவர் ஆண்டு 2034 சித்ரபானு - தை ஜனவரி 2003 மணி 1



சிறப்பாசிரியர்

**திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப**

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

**முனைவர் த. அமிர்தலிங்கம்,**
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.**
கூடுதல் ஆணையாளர்

**திருமிகு த. சுந்தரம் பி.ஏ., பி.எல்.**
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.**
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.**
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


## பொருளடக்கம்


மங்கல மார்கழியும் பாவை நோன்பும்
- திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.,
அரசுச் செயலாளர்

சிந்தனை விதைகள்
- திருமிகு ச. சாவர்க்கர் இ.ஆ.ப. (ஒய்வு)

இரண்டாம் திருமுறை - முனைவர் த. அமிர்தலிங்கம்

கீரை எங்கே? - கலைமாமணி மா. இலட்சுமணன்

''இடர்களையும் திருப்பதிகங்கள்'' – நூல் மதிப்புரை
- அ. நிறைமதி பி.எல்.

ஞானக் கரும்பு - டாக்டர் டி. செல்வராஜ்

திருப்புகழை ஓலைச் சுவட்டில் கண்டவர் - மு. அருணகிரி

மார்கழித் திருவாதிரைத் திருவிழா
- முனைவர் கோமதி சூரியமூர்த்தி

திருவிளையாடல் புராணம்
- திருமதி த. காவேரி பி.ஏ. பி.எல்.

மாத்தூர் மகிஷாசுரமர்த்தினி - ஜி. வெங்கடேசன் எம்.இ.

வந்தருள் மகரமாதேவி! - ஈங்கமணி பாட்டி

பகவான் விரும்பியேற்ற சிஷ்ய பாவங்கள்
- திருமதி இந்திரா ஆராமுதன்

திவ்வியப்பிரபந்தத்தில் இசை - பா. வேங்கடாசாரி

ஆஞ்சநேயர் ஜெயந்தி - திருமதி மீனாட்சி கோகுலவாசன்


முகப்பு

**திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரி அம்மன்**


உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

*திருக்கோயில்*

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : 8279407

# மங்கல மார்கழியும், பாவை நோன்பும்

- திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப. அவர்கள்,
தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறைச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

''மாதங்களில் நான் மார்கழியாகத் திகழ் கின்றேன்'' என்பது பகவத்கீதையில் கண்ண பெருமான் அருளியிருக்கும் திருவாக்காகும்.

தேவர்களுக்கு விடிகாலைப் பொழுதாகிய மார்கழிமாதத்தில் பாவை நோன்பு நோற்பது இரண்டு முக்கிய பலன்களை நல்கும்.

முதற்பலனாக நாட்டிற்கு நல்ல மழை பொழியும். இரண்டாவது பலனாக நோன்பு நோற்ப வர்க்கு நல்ல வாழ்க்கைத் துணை அமையும்.

''பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக'' என்று நடராசப் பெருமானாலேயே சிறப் பிக்கப் பெற்ற பெருமைக்கு உரியது மாணிக்கவாசக சுவாமிகள் அருளியுள்ள ''திருவெம்பாவை''ப் பாடல்கள் ஆகும்.

ஆண்டாள் நமக்கருளிச் செய்த ''சங்கத் தமிழ் மாலை'' எனச் சிறப்பிக்கப்பெறும் திருப் பாவை 30 பாடல்களும் வேதம் அனைத்துக்கும் வித்தாகும் எனச் சிறப்பிக்கப்படுகின்றன.

''பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் - கோதைத்தமிழ்
ஐயைந்தும், ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு''

என்று திருப்பர்வை பயிலாதவர்களைப் பூமிக்குப் பாரம் என்று பழித்து உரைக்கின்றார் வேதப்பிரான் பட்டர்.


மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளில் தமிழகத்தில் உள்ள அனைத்துத் திருக்கோயில் களிலும் விடிகாலையிலேயே ஒலிக்கத் தொடங்கு வன திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்கள் என்பது மட்டுமல்ல, வடவேங்கடம் ஆலயத்திலும் கூட மார்கழி மாதத்தில் விடிகாலையில் சுப்ரபாதப் பாடலுக்குப் பதிலாக ''திருப்பாவைப் பாடல்கள் மட்டுமே ஒலித்துக் கொண்டிருக்கும் என்பதால் இவற்றுக்குள்ள மாண்பினை நாம் நன்கு அறிய லாம்.

சைவ சமய குரவர்களில் ஒருவரான மாணிக்க வாசகர் தம்முடைய திருவெம்பாவையைத் தொடங் கும்போது ''ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெருஞ்ஜோதியை'' எனத் தொடங்குகின்றார். ''ஆ'' எனத் தொடங்கியிருப்பது ஆண்டாளை நினைத்தே என்பர் சில நயவுரையாளர்கள். ஆண்டாளும் அதே போல் திருப்பாவையைத் தொடங்கும் போது ''மார்கழித்திங்கள் மதி நிறைந்த நன்னாளால்'' எனத் தொடங்குகின்றார். இதில் ''மா'' எனத் தொடங்கியிருப்பது மாணிக்கவாசகரை நினைத்தே என்பர் சில நயவுரையாளர்கள். திருவெம்பாவை யும், திருப்பாவையும் இவ்வாறு சமய சமரசம் போற்றும் வகையிலே அமைந்திருக்கும் அருமைப் பாடு நாம் வியந்து போற்றுதலுக்குரிய ஒன்றாகும்.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவை, பரா சக்தியின் வடிவமாக மேகங்கள் கருநிறமாய்த் திரண்டு, பராசக்தியின் நுண்ணிடைபோல் மின்னல் மின்னி, பராசக்தியின் திருவடிச் சிலம்பினைப் போல் இடி ஒலித்து, பராசக்தியின் திருப்புருவம் போல வான வில்லும் தோன்றி, பராசக்தி சுரக்கும் திருவருளே போல் வானமழையும் பொழிதல் வேண்டும் என்பதைக் கீழ்வரும் பாடலில் குறிப்பிடு கின்றது.

''முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும்
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழைஏலோர் எம்பாவாய்.''

ஆண்டாள் அருளிச் செய்துள்ள திருப்பாவை, திருமாலின் கார்வண்ணமாக மேகங்கள் திரளவும், திருமாலின் கைச்சக்கரம்போல் மின்னல் மின்னவும்,



வலம்புரி சங்கினைப் போல் இடி இடிக்கவும், திருமாலின் சார்ங்கம் என்ற வில் பொழியும் அம்பு மழைபோல் பருவமழை பொழியவும் வேண்டும் எனக் கீழ்வரும் பாடலில் குறிப்பிடுகின்றது.

"ஆழி மழைக் கண்ணா! ஒன்றும் நீகைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழஉலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்து ஏலோர் எம்பாவாய்.''

இவ்வாறு மழைபொழிந்து மண்ணுலகம் தழைக்க வேண்டுமானால் மார்கழி நீராடிப் பாவை நோன்பு நோற்க வேண்டும் என்பது மாணிக்க வாசகரும், ஆண்டாளும் அறிவுறுத்தியுள்ள கருத்தாகும்.

பாவை நோன்பு இருத்தலால் பாருலகம் யாவும் நல்லமழை பொழிந்து பஞ்சமின்றி வாழலாம் என்பதையே ''சூடிக்கொடுத்த சுடர்க்கொடி'' ஆண்டாள்

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குப்பெருஞ்செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.''

என்ற திருப்பாவைப் பாடலிலும் விளக்கியிருக்கக் காணுகின்றோம்.

பாவை நோன்பு நோற்பதன் வாயிலாகப் பருவமழை பொழிந்து பாரும் தழைத்து ஓங்கும், நோன்பு நோற்பவருக்கு நல்ல வாழ்க்கைத் துணை இறையருளால் அமைந்து வீடும் மகிழ்ச்சியில் திளைத்து ஓங்கும்.

ஒரு பெண்ணிற்கு நல்ல கணவன் அமைய வேண்டும். அவ்வாறு அமையா விட்டால் வாழ்க்கையில் அனைத்து வளங்கள் இருந்தாலும், வீடு போர்க்களமாகி வாழ்க்கைப் பாலை வனமாகி விடும். இதே போல் ஆடவர்க்கும் நல்ல வாழ்க்கைத் துணை அமையாவிட்டால், மற்றவர்கள் முன் தலை நிமிர்ந்து நடக்க முடியாமல் போய்விடும்.

இதனைத் தமிழ்மறை தந்த பொய்யாமொழிப் புலவர் நம் திருவள்ளுவப் பெருந்தகை

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை''

''புகழ்புரிந்த இல்இலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் வீறு நடை''

ஆகிய திருக்குறள்களில் விளக்கியிருக்கக் காணு கின்றோம்.

பாவை நோன்பு இருந்தால் நல்ல வாழ்க்கைத் துணை அமையும் என்பதை மாணிக்கவாசகரும், ஆண்டாளும் திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல்களில் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

''முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப்
பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்
அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கு எங்கோன்நீ நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏலோர் எம்பாவாய்.''

(திருவெம்பாவை)

''சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துஉன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலார் எம்பாவாய்.''

(திருப்பாவை)

ஆண்டாள் ''மானிடர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'' என்று உறுதியாய் இருந்து பாவை நோன்பு நோற்று அரங்கனையே மணாளனாக அடையும் பேறுபெற்றது நாம் நினைந்து நினைந்து மகிழத்தக்க ஒன்றாகும்.

முதலில் உறக்கம் நீங்கி எழுந்த கன்னிப் பெண்கள், இன்னும் உறக்கத்தில் ஆழ்ந்துள்ள தம்மை ஒத்த பிற கன்னிப் பெண்களைத் துயில் எழுப்பும் பான்மையில் திருவெம்பாவை மற்றும் திருப்பாவைப் பாடல்கள் பாடப்பெற்றிருக்கக் காணுகின்றோம்.

ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங் களையே மாணிக்கவாசகரும், ஆண்டாளும் உறக்க மென நமக்கு உணர்த்தியுள்ளனர். அத்தகைய மும்மல உறக்கத்தில் இருந்து நாம் விழித்து எழுந்து, இறை யருள் எனும் தீர்த்தத்தில் நீராடி, இறைவனடி சேர வேண்டும் என்ற மெய்ப்பொருள் உண்மையையே நமக்குத் திருவெம்பாவை, திருப்பாவைப் பாடல் கள் உணர்த்துகின்றன.

''என்னே துயிலின் பரிசு''
''ஈதென்ன உறக்கமோ?''

''எழுந்திராய்! நாணா தாய்!''
''எல்லே இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?''

என்றெல்லாம் திருவெம்பாவையிலும், திருப் பாவையிலும் வரும் தொடர்கள் மும்மலமாகிய உறக்கத்திலிருந்து ஆன்மாக்கள் விடுபட வேண்டும் என்பதையே வற்புறுத்துவனவாகும்.

மும்மலமாகிய உறக்கத்திலிருந்து விடு பட்டு, இறையருளாகிய தடாகத்தில் நீராடப் பிறவித் துயர் கெடும், முத்திப்பதம் கிட்டும், பேரின்பப் பெருவாழ்வில் உயிர்கள் யாவும் இன்புறலாம் என்பதையே மார்கழி நோன்பும், மார்கழி நீராட லும் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

இறைவனே தலைவன்; ஆண்களும் பெண் களும் ஆகிய மானிட உயிர்கள் யாவும், தலைவ னின் திருவருளை நாடும் பாவைகள். ஆகவே பெண்களுக்கு மட்டும் உரியதல்ல மார்கழி நோன்பு; ஆடவர், பெண்டிர் அனைவருக்குமே உரிய இம்மங்கல மார்கழி நோன்பை நாம் எல் லோரும் நோற்று இகபர சுகங்கள் பெற்று இன் புற்றிடுவோமாக!

''போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம்
பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீர் ஆடேலோர் எம்பாவாய்.''

(திருவெம்பாவை)

''அன்றிவ் வுலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்இலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம்போற்றி
வென்றுபகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்''

(திருப்பாவை)

***

# சிந்தனை விதைகள்

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப., (ஓய்வு)
செயலாளர் - உறுப்பினர், வரிசீரமைப்பு மற்றும் வருவாய் மேம்பாட்டுக் குழு, தமிழக அரசு.

கடவுள்

1. மனிதன் மரத்தில் வீடுகட்டி வாழ்ந்து வந்த காலம் முதல் வீட்டில் மரம் வைத்து வளர்க்கும் இன்றுவரை இறைவன் சர்ச்சைப் பொருளாகவே இருக்கிறார்.

2. மனிதன் கடவுளாக முடியாது. நதி கடலைச் சென்றடைவது போல கடவுளுடன் ஐக்கிய மடையவே முடியும். பெருங்காயத்தைக் கடலில் கரைத்தால் பெருங்காயம் கடலாகிறது என்று யாரும் சொல்வதில்லை.

3. இறைவன் அவதாரம் எடுப்பதாகச் சொல்லப் படுவது அருளாளர்களுக்கும் ஆத்ம தாகமுள்ள வர்களுக்கும் தன் வயத்தனாகையால் (தானே உடல் எடுப்பது) பல்வேறு கோலத்திலும் பல் வேறு உருவத்துடனும் உயிர்களுக்கு உதவி செய்வதற்காகத் தோன்றி மறைவதாகும்.

4. கடவுள் உருவமற்றவர் என்று சொல்வது தவறு. ஒரு குறிப்பிட்ட உருவத்தை மட்டுமே உடை யவர் அல்ல என்பதே உண்மை.

5. உயிர்களுக்கு முதற்பிறவி வினையினால் வருவ தல்ல. கடவுளின் கருணையினால் ஏற்படுகிறது.

6. உயிர்கள் பேரின்பம் பெறுவதற்காக இறைவ னால் அளிக்கப்படும் பிறவிகளில் துன்பம் மேலோங்கி நிற்கும்போது இறைவன் பிள்ளை யையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டு கின்றாரோ என்று அறியாமையில் எண்ணத் தோன்றும்.

7. இறைவனது பேராற்றலை உணராமல் அவரது அற்புதமான படைப்புகளை இயற்கை என்று சொல்லி விடுகிறார்கள். இயற்கையும் இறை வனது படைப்பே.

8. வைரக்கற்களையே அள்ளிக் கொடுக்கக் காத் திருக்கும் இறைவனிடம் கண்ணாடிக் கற் களைக் கேட்பதை அற்ப ஆசை என்று சொல் வதைவிட அறியாமை என்று சொல்வதே பொருந்தும்.



9. இறைவன் தன்னுடைய விருப்பத்தினால் உடல் எடுப்பதால் உயிரினங்களைப் போன்று மூப்பு, பிணி, சாக்காடு கிடையாது. அடியவர் களுக்கு அவர்கள் ஆர்வத்துடன் வழிபடும் மூர்த்தமாகத் தோன்றுகிறார்.

10. உலக நன்மைக்காக தனிப்பட்டவன் எதுவும் செய்ய வேண்டியதில்லை. இது கடவுளின் பொறுப்பாகும்.

11. தான் பாதிக்கப்படாமல் இருக்கும்பொழுது யாருக்காவது தீங்கு செய்தால் நடப்புப் பிறவி யிலேயே அதற்கான தண்டனையைக் கடவுள் கொடுத்துவிடுவார்.

12. முக்திப்பேறு அளிப்பதற்குமுன் கடவுள் உண்மை யான பக்தனுக்கு எப்பவோ ஏற்பட்ட நியாய மான உலகியல் ஆசையைத் தீர்த்து வைக்கிறார்.

13. கடவுளைப் பற்றிய உண்மைகளை எளிதில் நிரூபிக்க முடியாததால் ஆன்ம வளர்ச்சி அடைந்த வர்கள் மட்டுமே அருளாளர்கள் கடவுளைப் பற்றிச் சொல்வதைப் புரிந்து கொள்ள முடியும்.

14. இறை சிந்தனையாக இருக்கும் ஒருவனுக்கு கடவுள், அறியும்படியாக சிறு சிறு நன்மை களைச் செய்து விடுவதால் அவனுக்கு கடவுள் மீது முழு நம்பிக்கை ஏற்பட்டு கடவுளை விரை வில் அடைந்துவிட வேண்டுமென்கிற எண் ணமே மேலிடும்.

*(தொடரும்)*

***

# இரண்டாம் திருமுறை

- முனைவர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பிஎச்.டி.

(முன் தொடர்ச்சி)

அமுதமாகிய தேவாரத் திருமுறைகளை அவனி உய்ய அருளவந்த அவதாரப் புருஷராம் திருஞானசம்பந்தர் அடியார் கூட்டம் புடை சூழத் திருத்தலந்தோறும் திருவடிகள் நோக நடப்பதைக் கண்டு கதிரோனும் மனங்கலங்கினான் என்கின்றார் நம் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

இந்த மாநிலத்தின் இருள் நீங்கிட வந்த வைதிக மாமணியாகிய திருஞானசம்பந்தர், மாறன் பாடி எனும் திருத்தலத்திற்கு வெயிலில் நடந்து வந்தார். அவர் திருவடிகள் நோக வெயிலில் நடந்து வருவதைக் காணச் சகியாமல் வெய்யவன் சென்று மேல்கடலில் வீழ்ந்தனன் என்று பாடுகின்றார் நம் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

''உய்யவந்த சம்பந்தருடன் வந்தார்க்கு
எய்துவெம்மை இளைப்பஞ்சினான் போலக்
கைகள் ஆயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்யவன் சென்று மேல் கடல் வீழ்ந்தனன்.''

(திருஞான. 192)

திருப்பொற்றாளம் தந்து முன்னர் திருவருள் புரிந்த திருக்கோலக்கா பெருமானைப் போல, திருஞானசம்பந்தருக்கு முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், முத்துச் சின்னங்களும் தந்து திருவருள் புரிய திருவுளம் கொண்டார் திருநெல்வாயில் அரத்துறை இறைவர்.

திருவரத்துறை வாழும் சிவனடியார்களின் கனவில் எழுந்தருளிய திருவரத்துறை இறைவர்

''ஞானசம்பந்தன் நம்பால் அணைகின்றான்
மான முகத்தின் சிவிகை மணிக்குடை
ஆன சின்னம் நம்பாற் கொண்டு அருங்கலைக்
கோன் அவன்பால் அணைந்து கொடும்''

(திருஞான. 197)

என்று பணித்தருளுகின்றார்.

சிவனடியார்கள் விடிகாலையில் திருப்பள்ளி எழுச்சிக்காகத் திருக்கதவைத் திறக்கிறார்கள். சந்திரனைப் போன்ற குளிர்ந்த முத்துச் சிவிகையும், முத்துக் குடையும், முழங்குவதற்குரிய ஒப்பற்ற சின்னங்களும் சந்நிதானத்தில் இருக்கக்கண்டு அளவிலாத பேரானந்தப் பெருக்கோடு அவைகளைத் தொழுது எடுத்துக் கொண்டு திருஞானசம்பந்தர் இருக்கும் இடம் வருகிறார்கள்.

திருஞானசம்பந்தர் கனவிலும் திருவரத்துறை இறைவர் ''நாம் மகிழ்ந்து அளிக்கும் அவை கொள்ளலாகும். கொண்டு உய்த்தல் செய்வாய்'' என்று இரவே உணர்த்திவிட்டார். திருவரத்துறை இறைவர் அருளிய முத்துச் சிவிகையில் திருஞானசம்பந்தர் ஏறியருளும் திருக்காட்சியைக் காண ஆவல் மிக்கவனாகக் கதிரவனும் உதயமானான் என்று கதிரவன் உதயமான காட்சியைக் கவினுற வர்ணிக்கின்றார் நம் சேக்கிழார் பெருமான்.


''போத ஞானப் புகலிப் புனிதரைச்
சீத முத்தின் சிவிகைமேல் ஏற்றிடக்
காதல் செய்பவன் போலக் கருங்கடல்
மீது தேரின்வந் தெய்தினன் வெய்யவன்''

(திருஞான. 209)

அடியார்கள் அரகர கோஷம் முழங்கியவாறு முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னங்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்து வைக்கிறார்கள். அரத்துறை இறைவர்தம் திருவருளை வியந்து ''எந்தை ஈசன் எம்பெருமான் ஏறமர்கடவுள்'' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடுகிறார் நம் திருஞானசம்பந்தர். ''அரத்துறை அடிகள் தம் அருளே!'' என ஒவ்வொரு பாடலிலும் திருவரத்துறை இறைவர் திருவருளை வியப்பதாக உள்ள இத்திருப்பதிகம் இரண்டாம் திருமுறையில் பியந்தைக் காந்தாரம் பண்ணில் அமைந்து விளங்குவது குறிப்பிடத்தக்கது.

''எந்தை ஈசன் என எடுத்து இவ்வருள்
வந்தவாறுமற் றெவ்வணமோ என்று
சிந்தைசெய்யும் திருப்பதிகத் திசை
புந்தி யாரப் புகன்றெதிர் போற்றுவார்''

(திருஞான : 214)



''பொடி அணிந்த புராணன் அரத்துறை
அடிகள் தம்மருளே இதுவாம் எனப்
படியிலாத சொன் மாலைகள் பாடியே
நெடிது போற்றிப் பதிகம் நிரப்பினார்''

(திருஞான : 215)

என்று அரத்துறை நாதரை மாறன்பாடியில் இருந்த வண்ணமே பாடி மனமுருகிய திருஞானசம்பந்தர் திறத்தை நமக்குக் காட்டுகிறார் தெய்வச் சேக்கிழார் பெருமான். திருஞானசம்பந்தர் அரத்துறை இறைவர் வழங்கியருளிய முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னங்கள் ஆகியவற்றை வலம் வந்து, பார்மீது விழுந்து வணங்கி, பஞ்சாக்கரம் ஓதி முத்துச் சிவிகையில் ஏறிய திருக்காட்சியை

''சோதி முத்தின் சிவிகைசூழ் வந்து பார்
மீது தாழ்ந்து வெண்ணீற்றொளி போற்றிநின்று
ஆதியார் அருள் ஆதலின் அஞ்செழுத்து
ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்''

(திருஞான. 216)

என்று போற்றியிருக்கக் காணுகின்றோம்.

திருஞானசம்பந்தர் முத்துச் சிவிகையில் ஏறும் திருக்காட்சி கண்டு சிவனடியார்கள் ''அரகர'' ''அரகரா'' என சிவனருளை வாழ்த்தி ஒலிக்க, மறைகள் ஆக்கின்றன; மலர்மழை பொழிகின்றன; மங்கல வாத்தியங்களும் முழங்குகின்றன. சைவ மாமறைத் தலைவர் முத்துச் சிவிகை ஏறிவரக் காணும் முத்துச் சின்னங்கள் எல்லாம் ''ஞானசம்பந்தன் வந்தான்'' ''பாலறாவாயன் வந்தான்'' ''ஓதாதுணர்ந்த முத்தமிழ் விரகன் வந்தான்'' என முழங்குகின்றன.

திருவரத்துறைக் கோயில் எதிர்படக் கண்டு முத்துச் சிவிகையிலிருந்து இறங்கி மீண்டும் பார் மீது விழுந்து வணங்கித் திருக்கோயிலுக்குள் செல்கின்றார் நம் திருஞான சம்பந்தர். திருவரத்துறை இறைவர் திருவருளைத் திருஞானசம்பந்தர் வியந்து வழிபட்ட மாட்சியைச் சேக்கிழார் பெருமான்

''மன்னு கோயிலை வலங்கொண்டு திருமுன்பு வந்து
சென்னி யிற்கரங் குவித்து வீழ்ந் தன்பொடு
திளைப்பார்
என்னையும் பொருளாக இன்னருள் புரிந் தருளும்
பொன்னடித்தலத் தாமரை போற்றி என்றெழுந்தார்''

(திருஞான : 226)

''சூடினார் கரகமலங்கள் சொரிந்திழி கண்ணீர்
ஆடினார் திருமேனியில் அரத்துறை விரும்பி
நீடினார் திருஅரும்பெருங் கருணையே நிகழப்
பாடினார் திருப்பதிகம் ஏழிசையொடும் பயில''

(திருஞான : 227)

எனப் பக்திச் சுவை நனிசொட்ட சொட்டப் பாடியிருக்கக் காணுகின்றோம்.

இத்தகைய அற்புதம் வாய்ந்த இரண்டாம் திருமுறைக் கண் அமைந்து விளங்கும் திருவரத்துறை திருப்பதிகம் பாடினால் பாடுவார் வினைகள் யாவும் ஓடும்; நமக்கு வாகனயோகமும் இறையருளால் கூடும். பியந்தைக் காந்தாரம் பண்ணில் அமைந்த இப்பயன்மிகு பதிகத்தைப் பாடிப் பயன் பெறுவோமாக.

திருச்சிற்றம்பலம்

எந்தை ஈசன் எம் பெருமான்
ஏறமர் கடவுள்என் றேத்திச்
சிந்தை செய்பவர்க்கு அல்லாற்
சென்றுகை கூடுவ தன்றால்
கந்தமா மலர்உந்திக் கடும்புனல்
நிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயில் அரத்துறை
அடிகள்தம் அருளே. 1

ஈர வார்சடை தன்மேல் இளம்பிறை
அணிந்தஎம் பெருமான்
சீருஞ் செல்வமும் ஏத்தாச் சிதடர்கள்
தொழச் செல்வ தன்றால்
வாரி மாமலர் உந்தி வருபுனல்
நிவாமல்கு கரைமேல்
ஆருஞ் சோலை நெல்வாயில் அரத்துறை
அடிகள்தம் அருளே. 2

பிணிகலந்த புன்சடை மேற் பிறையணி
சிவனெனப் பேணிப்
பணிகலந்து செய்யாத பாவிகள்
தொழச் செல்வது அன்றால்
மணிகலந்து பொன் உந்தி வருபுனல்
நிவாமல்கு கரைமேல்
அணிகலந்தநெல் வாயில் அரத்துறை
அடிகள்தம் அருளே. 3

துன்ன ஆடைஒன் றுடுத்துத் தூயவெண்
நீற்றின ராகி
உன்னி நைபவர்க்கு அல்லால் ஒன்றுங்கை
கூடுவ தன்றால்
பொன்னு மாமணி உந்திப் பொருபுனல்
நிவாமல்கு கரைமேல்
அன்னம் ஆரும் நெல் வாயில் அரத்துறை
அடிகள்தம் அருளே. 4

வெருகு ரிஞ்சுவெங் காட்டில் ஆடிய
விமலன்என் றுள்கி
உருகி நைபவர்க்கு அல்லால் ஒன்றுங்கை
கூடுவ தன்றால்
முருகு ரிஞ்சுபூஞ் சோலை மொய்ம்மலர்
சுமந்திழி நிவாவந்து
அருகு ரிஞ்சுநெல் வாயில் அரத்துறை
அடிகள்தம் அருளே. 5

உரவு நீர்ச்சடைக் கரந்த ஒருவன் என்றுஉள்
குளிர்ந் தேத்திப்
பரவி நைபவர்க்கு அல்லாற் பரிந்துகை
கூடுவ தன்றால்
குரவ நீடுயர்ச் சோலைக் குளிர்புனல்
நிவாமல்கு கரைமேல்
அரவம் ஆரும் நெல்வாயில் அரத்துறை
அடிகள்தம் அருளே. 6

நீலமாமணி மிடற்று நீறணி
சீவனெனப் பேணும்
சீல மாந்தர்கட்கு அல்லாற் சென்றுகை
கூடுவ தன்றால்
கோல மாமலர் உந்திக் குளிர்புனல்
நிவாமல்கு கரைமேல்
ஆலுங் சோலை நெல்வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. 7

செழுந்தண் மால்வரை எடுத்த செருவலி
இராவணன் அலற
அழுந்த ஊன்றிய விரலான் போற்றி
என்பார்க்கு அல்ல தருளான்
கொழுங்கனி சுமந்து உந்திக் குளிர்புனல்
நிவாமல்கு கரைமேல்
அழுந்தும்சோலை நெல்வாயில்
அரத்துறை அடிகள்தம் அருளே. 8

நுணங்கு நூல்அயன் மாலும் இருவரும்
நோக்கு அரியானை
வணங்கி நைபவர்க்கு அல்லால் வந்துகை
கூடுவ தன்றால்
மணங்கமழ்ந்து பொன்உந்தி வருபுனல்
நிவாமல்கு கரைமேல்
அணங்குஞ் சோலை நெல்வாயில் அரத்துறை
அடிகள்தாம் அருளே. 9

சாக்கியப் படுவாரும் சமண்படுவார்களும் மற்றும்
பாக்கியப் படகில்லாப் பாவிகள் தொழச்
செல்வதன்றால்
பூக்கமழ்ந்து பொன்உந்திப் பொருபுனல்
நிவாமல்கு கரைமேல்
ஆர்க்குஞ் சோலை நெல்வாயில் அரத்துறை
அடிகள்தம் அருளே. 10.

கறையினார் பொழில் சூழ்ந்த காழியுள்
ஞானசம்பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த அரத்துறை
அடிகள்தம் அருளை
முறைமையாற் சொன்ன பாடல் மொழியும்
மாந்தர்தம் வினைபோய்ப்
பறையும் ஐயுறவில்லை பாட்டிவை
பத்தும்வல் லார்க்கே.

திருச்சிற்றம்பலம்

***

# கீரை எங்கே?

## - கலைமாமணி மா. லட்சுமணன்

(நீதிக்கதை)

தவம் என்றால் தனிமையில் இருத்தல் - கண்களை மூடி மனதை ஒருநிலை படுத்தி அலை பாயும் மனத்தைக் கட்டுக்குள் கொண்டுவருதல் - மாதக் கணக்கில் ஆண்டு கணக்கில் கூட தவ நிலையை மேற்கொள்ள முடியும் என சாதனை படைத்திருக்கிறார்கள் - தவத்தின் நோக்கம் என்ன? இப்படி மனதை ஒருநிலைப்படுத்தி தியானம் செய்வதால் நாம் நினைத்த காரியங்கள் சித்தி யாகின்றன - குறிக்கோள் நிறைவேறுகிறது - நாம் நினைக்கும் வடிவத்திலே இறைவனைக் கொண்டு வந்து எதிரே நிறுத்துவதற்கு - இந்த தவநிலைக்கு வலிமை உண்டு. தவத்தைப் பற்றி நமது முன்னோர் கள் அறிந்த காரணத்தால் - பின் வரும் சந்ததியினர் அறியும்வண்ணம் - ஏட்டில் - கல் வெட்டில் எழுதி வைத்திருக்கின்றனர் - இவைகள் செவிவழிச் செய்தி களாக - கர்ண பரம்பரைக் கதைகளாக - தெருக்கூத் துக்கள் நாடகங்கள் வாயிலாக கதாகாலட்சேபங் களின் வழியாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக் கின்றன.

கானகத்திலே ஒரு சந்நியாசி நெடுநாட்கள் தவமிருந்திருக்கிறார். ஒரு நாள் அவர் கண் விழித்த தும் ஒரு கிராமத்துக்குள் வந்தார்....

ஏழை விவசாயி ஒருவன் - ஏர் கலப்பையைத் தோளில் சுமந்தவாறு - குடிசையை விட்டு வயலுக்குக் கிளம்பிக்கொண்டிருந்தான்.

சந்நியாசி அவனைப் பார்த்து - ''மகனே.... பசிக்கிறது ஏதாவது இருக்கிறதா?'' எனக் கேட்டார்.

பதறிப் போனான் விவசாயி - என் மனைவி யும் ஊரில் இல்லை - தங்கள பசியைத் தீர்க்க - நான் தான் சமையல் வேலையில் ஈடுபடவேண்டும். பசியைத் தாங்கிக் கொண்டு - சற்று நேரம் பொறுமை யாக இருக்க வேண்டும்.... என்றான் விவசாயி. ''பசி அதிகமாக இருக்கிறது.... நீராகாரம் இருந்தால் கூட பரவாயில்லை.'' என்றார் சந்நியாசி.

நேற்று சமைத்த கீரையில் கொஞ்சம் சட்டி யில் இருக்கிறது. சுடவைத்துக் கொண்டுவருகிறேன் என்று கூறிவிட்டு குடிசைக்குள் சென்று - கீரை யைப் பதப்படுத்தி எடுத்துக் கொண்டு வெளியே வந்தான் விவசாயி.

திண்ணையில் உட்கார்ந்திருக்கும் சந்நியா சியோ கண்களை மூடிக்கொண்டு தவநிலையி லிருந்தார்....

''சாமி.... சாமி.'' எனக் கூப்பிட்டுப் பார்த்தான் - ஊஹூம். அசைவே இல்லை.... கீரைச்சட்டியை அவர் அருகே வைத்துவிட்டு.... கலப்பையுடன் வயலுக்குப் போய் விட்டான்.

மாலையில் வந்து பார்த்தான். சந்நியாசி தனது கண்களைத் திறக்கவே இல்லை.... நாட்கள் மாதங்களாகி ஆண்டுகளாகிவிட்டன.... திண்ணை யில் கீற்றுவைத்து மூடி மறைத்து விட்டான் விவ சாயி.... காலங்கள் உருண்டு ஓடின. இயற்கையின் மாற்றத்தால் எல்லாமே மாறிவிட்டன.... குறிப் பாகச் சொன்னால் அந்த கிராமம் உருமாறி விட்டது....

பல ஆண்டுகளுக்குப்பின்னே... தனது நிலத் திலே கிணறு தோண்டும் பணியில் ஈடுபட்டான் குடியானவன் ஒருவன். மண்ணைத் தோண்டும் போது சடாமுடி தெரிந்தது - அதிலே சந்நியாசியின் முகம் தெரிய ஆரம்பித்தது - அரசனுக்குத் தகவல் பறந்தது.

இராஜகுருவுடன் அரசன் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தான்.

சந்நியாசியின் மோன நிலையைத் தவிர்க்க - ஒரு குடத்திலே பாலைக் கொண்டுவரச் சொன் னார் இராஜகுரு.

மண்ணுக்குள்ளிருக்கும் சந்நியாசியின் தலை யில் பாலை ஊற்றும்படி மன்னனுக்குக் கட்டளை யிட்டார் சந்நியாசி. அவ்வாறே செய்தான் அரசன்.

கண்விழித்த சந்நியாசி - கீரை எங்கே? என்று கேட்டார். அரசனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. ''என்ன கீரை வேண்டும்? எவ்வளவு கீரை வேண்டும்? எந்தப் பக்குவத்தில் வேண்டு? எனக் கேட்டான்.''

## ''சிவஞானக் கலாநிதி'' முனைவர் இரா. செல்வகணபதி அவர்களின் ''இடர் களையும் திருப்பதிகங்கள்'' - நூல் மதிப்புரை

- அ. நிறைமதி, பி.எல்.

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | இடர்களையும் திருப்பதிகங்கள் |
| நூல் தொகுப்பாசிரியர் | : | சிவஞானக் கலாநிதி டாக்டர் இரா. செல்வ கணபதி |
| நூலின் விலை | : | ரூ. 30.00 |
| பக்கங்கள் | : | 126 |
| நூல் வெளியீடு | : | முனைவர் இரா. செல்வ கணபதி<br># 15 / 2 கரிகாலன் தெரு,<br>கலாசேத்ரா காலனி,<br>பெசன்ட் நகர்,<br>சென்னை - 600 090. |

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் பெருமக்கள் அருளால் இறந்தவர் பலர் பிழைத்து எழுந்தனர். நோயுற்றோர் நலம் பெற்றனர். வறிஞர் செல்வர் ஆயினர். தடையுற்ற திருமணங்கள் நிகழ்ந்தேறின. ஊமைகள் பேசினர். பார்வை இழந்தோர் கண் ஒளி பெற்றனர். விதி வழி இல்லை என்று கூறப் பட்டவர்களுக்கும் மகப்பேறுகள் வாய்த்தன. இத் தகைய அற்புதங்கள் நிகழ்ந்தேறக் காரணமாய் இருந்தவை மூவர் அருளிய தேவாரத் திருப்பதிகங் களும், மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும் ஆகும்.

''ஆவடுதுறை அரன் பொன் தருவான்., திருவெண்காடு சென்று வழிபட்டால் பிள்ளைப் பேறு வாய்க்கும். கச்சி ஏகம்பன் கண்ணொளி தருவான். நெடுங்களம் சென்றால் துன்பம் நீங்கும். திருக் கருகாவூர் வழிபாடு கருக்காத்து உய்க்கும். சிராப் பள்ளிக் குன்றுடையான் தாயெனத் துணை நிற் பான். 'ஒன்றுகொலாம்' பதிகம் பாம்பின் விடம் நீக்கும். திருச்சாழல் பாராயணம் பேசும் ஆற்றல் மேம் படுத்தும். ''வேயுறு தோளி'' என்றால் நவகோள் களும் நன்மை செய்யும்.''

என்றெல்லாம் திருப்பதிகங்களின் பலன் களைத் தொகுத்துக் கூறும் நூலாசிரியர் முனைவர் இரா. செல்வகணபதி அவர்கள் மெய்யன்பர்கள் அனை வரும் நாள்தோறும் ஓதிப்பயன்பெற 36 திருப் பதிகங்களை இப்பயன்மிகு நூலில் சிறப்புறத் தொகுத்து வழங்கியுள்ளார்கள்.

திருமணம் கைகூடுதல், பிள்ளைப்பேறு வாய்த்தல், கருச்சிதையாது குழந்தை பிறத்தல், செல்வ வளம் பெருகுதல், துயரங்கள் தவிடு பொடி ஆதல், பில்லி சூனியம் முதலானவை செயல் இழத்தல், நவக்கிரக தோஷம் நீங்குதல், இனம் புரியாத அச்சத்திலிருந்து விடுபடுதல், அகால மரணம் ஏற் படாத வாழ்வு பெறுதல், முதுமை வாழ்வு அமைதி யாக நடைபெறுதல் என வாழ்வின் அனைத்து நிலை களிலும் துணைவரும் திருப்பதிகங்கள் இவை இவை எனப் பட்டியல் இட்டுப் பயன் உறத் தொகுத்து வழங்கியுள்ள நூலாசிரியர் முனைவர் இரா. செல்வகணபதி அவர்களை எவ்வளவு பாராட்டி னாலும் தகும்.

இல்லந்தோறும் இருக்கவேண்டிய ஆக்கம் தரும் நூல்.
உள்ளந்தோறும் இனித்திருக்கக் கூடிய
பேருக்கம் தரும் நூல்.

---

சந்நியாசி சிரித்தார் - தவநிலையில் பல ஆண்டுகள் ஓடிப்போனதை உணர்ந்தார்.... இவரைப் பொறுத்தவரை அவைகள் விநாடிகள்தான்.

அரசரைப் பார்த்து சந்நியாசி கூறினார் - ''கீரை கொண்டுவருகிறேன் என்று கூறிவிட்டுச் சென்றதற்கே மன்னனாகி விட்டாய்! கீரை கொண்டு வந்திருந்தால் சக்ரவர்த்தியாகி இருப்பாய்.'' எனப் பூர்வீகத்தில் நடந்தவற்றை விளக்கினார் சந்நியாசி....

சுழலுகின்ற உலகம் அந்த நாளிலிருந்து ஒரே சீராகத்தான் சுழன்று கொண்டிருக்கிறது. மனிதன் தான், தன்னை வேகப் படுத்திக் கொண்டுவிட்டான்.... தலைகால் புரியாத இந்த வேகத்தினால் - தர்மங்களும் - நியாயங்களும் - பண்பாடுகளும் - தலைகீழாக மாறிவிட்டன - சாத்திரங்களும் கோட்பாடுகளும் - தேவையற்றவை எனத் தள்ளப்பட்டுவிட்டன.... இந்த மண்ணுக்கே உரித்தான கலாசாரங்கள் காற் றோடு காற்றாய் கனவாய்ப் பழங்கதையாய், கானில் எரித்த நிலவாய் கடலிற் பெய்த மழையாய்ப் போய் விட்டன....

சிந்திப்போம் செயல்படுவோம்.

***

# ஞானக்கரும்பு

– டாக்டர் டி. செல்வராஜ்

1. ''களிதரு தேனே! கடலமுதே! கரும்பே!''
(திருவாசகம் 374)

என்பது திருவாசகத்தின் ஒரு வாசகம். இறைவன் களிப்புத்தருகின்ற தேன் போன்றவன்; கடலில் தோன்றிய அமுதம் போன்றவன்; கரும்பு போன்றவன். இவை மூன்றும் இனிப்புகள்; ஆனால், இவற்றின் சுவைகள் வெவ்வேறு, இவற்றைப் போன்ற இறைவன் இன்பமயமானவன்; இனிமையானவன்; ஆனந்தன். தேன் - வாயில் பட்டதும் சுவை தரும்; ஆனாலும், இது வண்டின் எச்சில். அமுதம் - தேவர்களே சுவைக்கக் கிடைப்பது. அமுதச்சுவை தவிர, வேறு சுவைகளைத் தேவர்கள் அறியமாட்டார்கள்; மனிதர்கள் அறிவார்கள். கரும்பு - தனித்த இனிப்புச் சுவை உடையது. இன்ப வடிவத்தில் இறைவன் தேன்; அமுதம்; கரும்பு.

2. விறகில் தீயுண்டு; அதைக்கடைந்தால் தெரியும். பாலில் நெய்யுண்டு; அதைப்பக்குவப் படுத்தினால் தெரியும். கரும்பில் சாறுண்டு; அதை நொறுக்கினால் தெரியும். கரும்பில், சாறாக மறைந்து நின்றுள்ளானாம் மன, வாசகம் கடந்த இறைவன். மாணிக்க வாசகரின் மணியான மற்றொரு வாசகம் இது:-

''நின்னதாள் கரும்புமட்டு வாய்மடுத்து
எனைக்கலந்து''
(திருவாசகம் 84)

கரும்பு மட்டு = கரும்பின் சாறு; 'அக்காரம்' என்பது இதுவே. இதைப்பக்குவப்படுத்தினால் கிடைப்பது சர்க்கரை.

பொருள் : ''உன் திருவடிகளில் ஊறுகின்ற கருப்பஞ்சாறு போன்ற அருளமுதத்தை எனக்கு ஊட்டி என் உயிரோடு ஒன்றி இருந்து....''

3. கருப்பஞ்சாற்றைத் தெளிவுபடுத்தினால் கிடைப்பது கரும்பின் தெளிவு. கருப்பஞ்சாற்றை விடக் கரும்பின் தெளிவு மிகத் தெளிவானது; மிகச் சுவையானது.

''தேனே! அமுதே! கரும்பின் தெளிவே! சிவனே''
(திருவாசகம் 59)

இறைவன் கரும்பின் தெளிவைப் போன்றவனாம். நம் மனப்பொற்பலகையில் பளிச்சென்று பதிகின்றது இந்த மாணிக்க வாசகம்.

4. ஆலையில், கருப்பஞ்சாற்றுத் தெளிவை, முரிந்து போகாமல் செம்பாகமாகக்காய்ச்சினால் கிடைப்பது ''கரும்பின்பாகு.''

''ஞானக் கரும்பின் தெளியைப் பாகை;
நாடற்கரிய நலத்தை....'' (திருவாசகம் 209)

மாணிக்க வாசகர் கரும்பை, ''ஞானக்கரும்பு'' என்று உயர்த்திச் சிறப்பித்துப்பாடினார். இறைவன், இதன் தெளிவைப் போன்றவனாம்; பாகைப்போன்றவனாம்.

5. கரும்புப்பாகின் அச்சு வடிவம் கருப்பங்கட்டி; வெல்லக்கட்டி.

''தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின்
கட்டியுமாய்''
(திருவாசகம் 190)

கருப்பங்கட்டியைப் போன்றவன் இறைவன் என்று மாணிக்க வாசகர் அருளினார்.

6. மேற்குறித்த கரும்பு முதலிய ஐந்தும் கண்களுக்குப் புலனாகின்றன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறான சுவையுடையவை. அவை படிப்படியாகப் பக்குவப்படுகின்றபோது, முந்திய பொருளை விட, அடுத்த பொருள் சுவையால் கூடுதலாகின்றது. அவை தருகின்ற சுவைகள் நுண்பொருள்; கண்களுக்குப் புல னாகாதவை. கரும்பு - இறைவன்; கரும்பு தரும் சுவை - அருள். அருட்சுவையைச் சுவைத்த மாணிக்கவாசகரின் கூற்று :-

''கரும்புதரு சுவை எனக்குக் காட்டினைஉன்
கழலிணைகள்''
(திருவாசகம் 544)

பொருள் : ''உன் திருவடிகள் இரண்டிலும் பெருகுகின்ற, கரும்பு தருகின்ற சுவை போன்ற அருளினை, எனக்குக் காட்டி அருளினாய்.'' இந்த அருட்சுவை நிரந்தரமானது.

7. சுவைப்பவர் ஒரு பொருளைச் சுவைத்தால்தான் அச்சுவையின் பயனும், அருமையும் தெரியும். ஒரு பொருளைச் சுவைப்பதற்கு மனப் பக்குவமும், நாக்கு முதலிய உடற்கருவிகளும், உணர்வுகளும் அவசியம் தேவை. கரும்பின் சுவை போன்ற இறையருளை உணர்வதற்கும் அவை தேவைப்படுகின்றன. திருவருளைச் சுவைக்கின்ற சிவானுபவம் அக்காரம் போன்றதாம். அக்காரம் - சர்க்கரை. இதோ மாணிக்க வாசகரின் சர்க்கரைச் சிவானுபவம் :-

''அடியேனை அடித்தடித்து அக்காரம் முன் தீற்றிய
அற்புதம் அறியேனே'' (திருவாசகம் 569)

பொருள் : ''எனக்கு முன்னே தோன்றி, என்னை அடித்து, அடித்துச் சர்க்கரையை ஊட்டிய அற்புதத்தை நான் அறியவில்லை.'' தீற்றிய = ஊட்டிய.

கரும்பு என்பது ஒரு வகைப்புல் ஆகும். இது புல்லாய் - சாறாய் - தெளிவாய் - பாகாய் - கட்டியாய் - சர்க்கரையாய் - சுவையாய் - என இவ்வாறு பல பிறவிகளாக மாறுகின்றது. இவற்றை மாணிக்கவாசகர் உவமைகளாக அடுக்கிச் சிவனையும், சிவானுபவத்தையும் விவரிக்கின்றார்.

★★★

## பட்டினத்தார் காட்டும் கரும்பு

திருவொற்றியூர் இறைவனையே கடலருகே நிற்கும் கரும்பாகப் பாடுகின்றார் பட்டினத்தார்.

''கண்டங் கரியதாங் கண்மூன் றுடையதாம்
அண்டத்தைப் போல அழகியதாம் - தொண்டர்
உடலுருகத் தித்திக்கும் ஓங்குபுகழ் ஒற்றிக்
கடலருகே நிற்கும் கரும்பு.''

கரும்பைச்சில தெய்வங்கள் ஏந்தியவாறு திருக்காட்சி தருகின்றனர். அக்கரும்பால் நுண்ணிய ஆன்மீகக் கருத்துகள் சில புலனாகின்றன.

*1. காமக்கரும்பு :* காதற்கடவுளான காமன் ஏந்தியிருக்கின்ற கரும்பு வில் 'காமக்கரும்பு'. இது இல்லற வாழ்வில் அடிப்படையில் தேவைப்படுகின்ற காதல் உணர்வுகளை உருவாக்குகிறது.

*2. போகக்கரும்பு :* இல்லறத்தில் பற்பல போகங்களை - இன்ப நுகர்ச்சிகளை நுகர வேண்டும். இவற்றைக் காமாட்சி, மீனாட்சி, அபிராமி, புவனேசுவரி, ராஜராஜேசுவரி முதலியோர் அருளுகின்றனர். இவர்கள் ஏந்தியிருப்பது ''போகக் கரும்பு''.

*3. யோகக் கரும்பு :* சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற முத்தி பேறடையக்கூடிய நெறிகள் நான்கு. விநாயகரின் பேரருளைப்பெற யோக நெறி உகந்தது. ஔவையாரும் விநாயகர் அகவலில் யோக நெறியின் நுட்பங்களைப் புலப்படுத்துகின்றார்.

விநாயகரின் வடிவங்கள் மொத்தம் முப்பத்திரண்டு. இவற்றுள் பல வடிவங்களில் அவர் கரும்புத் துண்டையும், கரும்பையும், கரும்பு வில்லையும் ஏந்திக் காட்சி தருகிறார். விநாயகர் ஏந்திய கரும்பு, அவரை அடையக்கூடிய ஒரு நெறியான யோக நெறியைச் சுட்டுவதால் அது ''யோகக்கரும்பு.''

*4. ஞானக்கரும்பு :* பட்டினத்தார் ஞான நெறியில் சென்று முத்தியடைந்தார். இவர் கையில் இருப்பது ''ஞானக்கரும்பு.''

ஔவையார் விநாயகர் அகவலில் சுட்டிய ''கணு முற்றி நின்ற கரும்பு'' மிக்க சுவையானது. பொதுவாக, கரும்பு காட்டுகின்ற தத்துவ உண்மைகள் சில வருமாறு :-

1. கரும்பு - உடம்பு; சாற - உயிர்; சுவை - இறைவன்
2. கரும்பில் சாறும், சாறில் சுவையும் இணைந்து இரண்டற இருப்பதைப் போல, இறைவனும் உயிரும் இரண்டற இணைவதே முத்தி.

★★★

# திருப்புகழை ஓலைச் சுவட்டில் கண்டவர்

- "திருப்புகழ்மாமணி" மு. அருணகிரி

நன்னெறியைக் கடைபிடித்துக் கரையேறிய பெரியோர்களின் வரலாறுகள் எத்தன்மையன எனத் தெரிந்து கொள்ளுதல், வாழ்க்கைக்கு மிகவும் பலன் தரக் கூடியவையாகும்.

அமரர், வ.த. சுப்பிரமணியப்பிள்ளை என்பவர் தொண்டை நன்னாட்டில் செங்கல்பட்டு அடுத்த வடக்குப்பட்டு எனும் கிராமத்தில், அமரர் திரு தணிகாசலம் என்பவருக்கும், இலக்குமி அம்மாளுக்கும், சீர்கருணிகர் குலத்தில், 1846-ம் ஆண்டு, டிசம்பர் 11-ம் தேதி, வெள்ளிக்கிழமை, கௌதமமகரிஷி கோத்திரத்தில் பிறந்தவராவர். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், தணிகைப் பெருமானுக்கு வழி வழி அடிமை பூண்டவராவார்.


வ.த. சுப்பிரமணியப்பிள்ளை தமது சிறு வயதிலிருந்தே, நல்லாரோடிணங்கி, முன்னோர் களது நல் வழியே பற்றி வாழக் கருதினார். குடும்ப வறுமை நிலையை உணர்ந்து, உயர் கல்வி கற்க வாய்ப்பின்றி, 1863-ம் ஆண்டு, ஜூலை முதல் தேதியன்று எட்டு ரூபாய் சம்பளத்தில், ஆசிரியர் பணியில் சேர்ந்தார். இருந்தும், அருண கிரியார்தாம்பாடிய திருப்புகழில், "தீயின் மேல் கிடந்து நெளியுநீள் புழுவாயினேற்கிரங்கி - அருள் வாயே" எனும் கருத்துக்கு ஏற்ப, தணிகேசனை "மிடிதீர - அருள்வாயே" என துதித்து வந்தார். 1867-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மில்லர்துரை மூலமாக வேறிடத்தில் அதிக ஊதியம் பெறவாய்ப் பிருந்தும், தமது ரட்சகராகிய மில்லர் துரையிடமே நன்றி விசுவாசமுடன் பணிபுரிந்தார். இவர், காலை யில் சிவபுராணம் படிக்கும் வழக்கத்தைப் பின்பற்றி, தமது இறுதி காலம் வரை விடாது துதி செய்து வந்தார்.

இவர், மஞ்சகுப்பம் டிஸ்டிரிக் கோர்ட் டுக்கு விண்ணப்பத்தின் பேரில், 1870 - ஆண்டு பிப்ரவரி முதல் தேதி மஞ்சகுப்பம் கோர்ட்டில், குமாஸ்தா வேலையில் சேர்ந்தார். இவர், கடலூர் கோர்ட்டில் குமாஸ்தா வேலையிலிருந்த போது, 1871-ம் ஆண்டு சிதம்பர தீட்சதர்களுக்கும், ஆலய நிர்வாகிகளுக்கும் நிகழ்ந்த வாதத்தில் தீடசதர்கள் தங்களுக்குள்ள ஆலய உரிமையை உறுதிப்படுத்த, மேற்கோளாக பல நூல்களிலிருந்தும் பாடல்களை மேற்கோளாக எடுத்துக்காட்டியதோடு, சிதம்பரம் திருப்புகழ் பாடல் ஒன்றில், 7-வது அடியில்,

"வேதநூன்முறை வழுவா மேதினம்
வேள்வி யாலெழில் புனைமூ வாயிர
மேன்மை வேதியர் மிகவே பூசனை - புரிகோவே"

எனவரும், "தாது மாமலராலே" எனும் முதலடியைக் கொண்ட பாடலையும் எடுத்துக்காட்டியிருந்ததாக வும், அப்பாடலின் தேனொழுகும் இனிமை இவர் தம் மனதை மிகவும் கவர்ந்து, திருப்புகழில் ஆசையை உண்டுபண்ணவே, தில்லைக் கூத்தன் திருவருள் எண்ணி எண்ணி உருகினார். நம்பியாண்டார் நம்பி யின் துணை தேவாரத்தை உலகுக்கு வெளிவரச் செய்தருளிய நடனசபாபதியே, மேலை வாயிலில் வீற் றிருக்கும் முருகப்பெருமானே, ஓலைச்சுவட்டில் உள்ள திருப்புகழையும் புத்தகவடிவில் உலகில் பரவ, வ.த. சுப்பர மணியம் பிள்ளையை, காரண புருஷராக தோற்றுவித்தான் போலும் என நினைக்கத் தோன்றுகிறது. இதனால் தில்லையின் சிறப்பு நன்கு விளங்குகிறது. அதோடன்றி, சிதம்பரத்தைச் சேர்ந்த வீரநாராயணபுரத்தில் பிறந்த நாதமுனிகளால் நாலாயிரத் திவ்வியபிரபந்தம், நம்மாழ்வார் அனுக்ரகத் தால், அவரது பரம்பரையைச் சேர்ந்தவர்களின் உதவியைக் கொண்டு, ஆழ்வார்கள் பாடல் களை ஒன்று சேர்த்து, 1866-ம் ஆண்டு, புத்தகவாயிலாக மக்களுக்கு கிடைத்தது. இவ்வாறு தேவாரமும், திருப்புகழும், நாலாயிரத்திவ்ய பிரபந்தமும் தோன்ற சிதம்பரம் எனும் தலமே துணையாயிருந்தது.

1871-ம் ஆண்டு முதல், திருப்புகழாகிய ஓலைச்சுவடிகளை சேர்க்க ஆரம்பித்தார். 1876-ம் ஆண்டு, ஆறுமுக நாவலர் மூலம் இயற்றப்பட்ட புத்தகத்தில், 6 திருப்புகழ் பாடல்கள் கிடைத்தன. 1876-ம் ஆண்டு ஏப்ரல் மாதம், "புனித வெள்ளி" முதல் கிடைத்த ஓலைச் சுவடிகளில் உள்ள திருப்புகழ் பாடல்களை புத்தகத்தில் எழுத ஆரம்பித்தார். இவர் தம் வாழ் நாளில் குறைந்தது 1000- பாடல்களையா வது அச்சிட்டு வழங்க வேண்டும் என்று திருத்தணி கேசனை பிரார்த்தித்து வருவாரானார். 1878-ம் ஆண்டு, ஜூன் 28-ம் தேதியன்று, காஞ்சி, புத்தேரித் தெருவில் வசித்து வந்த அண்ணாமலைப்பிள்ளை என்பவரால் 750 பாடல்கள் கொண்ட திருப்புகழ்



ஓலைச்சுவடிகள் கிடைத்தன. செப்டம்பர் - 30-ம் தேதி, சிதம்பரத்துக்கு அடுத்த பின்னத்தூர் சீனிவாஸ பிள்ளை மூலம் 400 பாடல்கள் உள்ள ஓலைச் சுவடியும், இவைகளுக்கு முன்னரே, 120 பாடல்கள் அடங்கிய ஓலைச்சுவடிகள் கிடைத்ததாகவும் தெரிய வருகிறது.

1897-ல், நவம்பர் 19-ம் தேதி, மதுரை வந்தடைந்ததும், அதியற்புதமாக ராகத்துடன் திருப் புகழ் பாடும் திறமை வாய்ந்த, பேறையூர் ஜமீன் தார் நாகையாசாமி தும்மிச்சி நாயகர் அவர் களுடைய நட்பு கிடைத்தது. அவர் பாடும் பாடலைக் கேட்டு ரசித்தார். தக்க தமிழ்ப் புலவர்களைக் கொண்டு, கிடைத்த எல்லாப்பாக்களையும், உரிய முறையில் தொகுத்து, 1895-ம் ஆண்டு முருகனுக்குரிய 6 திருப்பதிகளையும் கொண்ட பாடல்களை முதல் பாகமாகவும், பஞ்சபூதத் தலங்கள், ஏனைய தலங் களின் பாடல்களை சேர்த்து, 1902-ம் ஆண்டு, இரண் டாம் பாகமாகவும், பொதுப்பாடல்கள், திருவகுப்பு கந்தரலங்காரம், கந்தரந்தாதி, அனுபூதி போன்ற பாடல் களை 1906-ம் ஆண்டு மூன்றாம் பாகமாகவும் வெளி வரச் செய்தார். 1909-ஆண்டு, உடல் நலிவுற்று, அதி காலை தணிகேசனை நினைத்து கண்ணைச்சிறிது திறந்ததும், முருகப் பெருமானே இவருக்கு மோட்ச வாயில் கதவைத் திறந்து காட்சி கொடுத்து, ''பெற்றலும் பிறந்தேன், இனி பிறவாத தன்மை வந்தெய்தி னேன்'' எனும் தேவாரப் பாடலுக்கு ஏற்ப, இறைவன் திருவடி நிழலை அடைந்தார். இவர் தம் வாழ் நாளில் திருப்புகழ் ஓலைச்சுவடிகளைச் சேகரித்து, அவைகளை ஒழுங்குபடுத்தி அச்சிட்டுத் தந்ததன் பயனே, இன்று நாம் போற்றியும், பாடியும் வரும் பாக்கியத்தை பெற்றோம்.

வ.த. சுப்பிரமணிய பிள்ளையின் ஆத்மா இறைவன் அடிசேர்ந்து, மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந் தார் எனப் போற்றிச் செய்வோமாக. அன்னாரது குடும்பத் தினரோடு நாமும், அன்னாரின் இழப்புக்கு ஆழ்ந்த அனுதாபத்தைப் பகிர்ந்து கொள்வோம். தம் தந்தை யாரின் மறைவைக் குறித்து அன்னாரின் மகனார், தணிகை மணி வ.சு. செங்கல்வராய பிள்ளை, அவர் களால் பாடப்பட்ட பாடல் பின்வருமாறு:-

''தில்லை மூவாயிரவர் தம் பெருமை சொல்லும்
திருப்புகழின்
அழகதனைக் கண்டுகளி கொண்டே
எல்லையி லாபேரின்பத்தோடுஏடு தேடி எந்தை
திருப்புகழதனில்
பதின்மூன்று நூறிங்கு
ஒல்லை அச்சிட்டுலகினர்க்கிங்குதவிய பேராளர்
உயர்குண
சுப்ரமணிய நிறைதவத்துச் சீலர்
நல்லாரவர் சீர்பாதம் நாளும் நினைந்தேத்தி நாடி
வரும்
வினைகளை ஓடடவெல்லோமே.''

★ ★ ★

# மார்கழித் திருவாதிரைத் திருவிழா

- முனைவர் திருமதி கோமதி சூரியமூர்த்தி, மதுரை

மாதங்களில் மார்கழி மாதம் சிறந்தது. கண்ணபிரான் கீதையில், ''மாதங்களில் நான் மார்கழி மாதமாயிருக்கிறேன்'' என்று கூறியருளியுள்ளார். இந்த மாதம் தேவர்களுக்கு விடியற்காலை வேளை யாகும். இம்மாதத்தின் பெருமையை உணர்ந்த முன்னோர்கள் அதனைப் பீடுடைய மாதம் என்றனர். பீடு என்றால் பெருமை எனப்பொருள். அச்சொல் நாளடைவில் மருவி பீடை மாதம் என வழங்கல் ஆயிற்று. இம்மாதத்தைச் சூன்யமாதம் என்று சிலர் கூறுவர். சூன்யம் என்றால் ஏதுமற்றது என்று பொருள். இம்மாதத்தில் மக்கள் அதிகாலையிலேயே எழுந்து, நீராடி, பக்தியுடன் பரமனை வழிபடுவதால், ஆணவம் முதலிய மலங்கள் நீக்கப்பட்டு, எக்குற்றமும் இல்லாத மனத்துடன் இருப்பதால் இம்மாதத்தைச் சூன்ய மாதம் என்றனர். இம்மாதம் இறை வழிபாட்டிற்கே ஒதுக்கப்படுவதால் திருமணம் முதலிய சடங்குகள் இம்மாதத்தில் நடத்தப்படுவதில்லை.

இம்மாதத்தில் வரும் முக்கியமான ஒரு திருவிழா திருவாதிரைத் திருவிழா. திரு என்னும் அடைமொழி சேர்ந்த நட்சத்திரங்கள் திருவாதிரையும், திருவோணமும் ஆகும். திருவாதிரை சிவபெருமானுக்கும், திருவோணம் நாராயணனுக்கும் உகந்த நன்னாளாகும். சிவபெருமானுக்கு ஆதிரையான் என்ற பெயர் உண்டு. மார்கழித் திருவாதிரை விசேட நாள். மா-மாய்தல் கழி - கழிதல். இறைவன் அழித்தல் தொழிலைச் செய்த பிறகு, மீண்டும் தோற்றுவிக்கும் காலத்தை உணர்த்தும். திரு என்பது சிறப்பைக் கூறும் அடைமொழி. ஆ - ஆன்மா. திரை - மறைத்தல். ஓர் உயிர் செய்த நல்வினை, தீவினைகளுக்கு ஏற்றவாறு இன்ப, துன்பங்களை இறைவன் ஊட்டும் திரோபவச் செயலை இஃது உணர்த்துகின்றது. இம்மாதம் முழுவதும் இறைவனைத் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஓதி வழிபடுவர். திருவெம்பாவையின் உட்பொருள் - பக்குவமுடைய அடியார்கள் / பிறரை ஆணவமலமாகிய இருளில் பொருந்தியிராமல், சிவபெருமானுடைய திருவருளாகிய நீரில் முழுகுவதற்கு வாருங்கள் என அழைத்தல். ''மல இருளூற்று உறங்காமல் மன்னு பரிபாகர் அருள், செல முழுக வருக என அழைத்தல் திருவெம்பாவை'' என பழைய திருப்பெருந்துறைப் புராணம் கூறுகின்றது. நம் உடலில் படியும் புற அழுக்குகளை நீராடிக் குளித்துப் போக்கிக்கொள்வது போல, நமது உள்ளத்திலுள்ள அக அழுக்கான ஆணவத்தை இறைவனைத் தியானித்து இம்மாதம் போக்கிக் கொள்கின்றோம்.

மார்கழித் திருவாதிரை விழா திருவாதிரை நாளுக்குப் பத்து நாட்களுக்கு முன் தொடங்கி, அந்நாளில் நிறைவு பெறும் திருவிழா ஆகும். இவ்விழா மிகப் பழங்காலத்திலிருந்தே கொண்டாடப் பட்டு வருவதை,

''கனைக்கும் அதிர்குரல் கார்வான நீங்கப்  
பனிப்படு வைதல் விதலைப் பருவத்து  
ஞாயிறு காயா ஒளிமாறிப் பிற்குளத்து  
மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை  
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க''

என வரும் பரிபாடலால் அறியலாம். இப்பெருவிழா திருவாரூரில் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மிகச் சிறப்பாக நிகழ்ந்து வந்ததைத் திருநாவுக்கரசரின் ''முத்து விதானம்'' என்று தொடங்கும் பதிகத்தால் (4 : 21ஆம் பதிகம்) அறியலாம். அப்பதிகப் பாடல் இறுதிதோறும், ''ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்'' என முடிகின்றது. இந்நாளில் தேவர்களும் கூட இப்பூவுலகிற்கு வந்து வைகறையில் சிவபெருமானை வணங்குகின்றார்களாம் *(4 : 21 : 4)*. இறைவனைத் தொழாத நாள் துன்பம் என்பர் சிலர். அவனைப் புகழ்ந்து போற்றும் நாள் இன்பம் என்பர் சிலர் *(4 : 21 : 9)* வினைப்பலன்களை உயிர்கள் அனுபவிக்கும்படிச் செய்யும் இறைவன், அவனை வழிபடும் உயிர்களை வினையிலிருந்தும் விடுவிப்பான் அல்லவா? உடலுக்கு வரும் பிணிகளை மருந்துண்டு தீர்த்துக்கொள்வது போல, உயிரைப் பற்றியுள்ள மலப்பிணிகளை வழிபாடு புரிவதன் மூலம் தீர்த்துக் கொள்கின்றோம். வழிபாட்டின் மூலம் துன்பம் நீங்கப் பெறுவதோடு இன்பமும் ஓங்கப் பெறும். ஆதலால்தான் நாவுக்கரசர் திரு ஆனைக் காப்பதிகப் பாடலில்,

''துன்பம் இன்றித் துயர் இன்றி என்றும் நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்
என் பொன் ஈசன் இறைவன் என்று உள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே''

(5 : 31 : 3)

என்கிறார். வள்ளுவரும்,

''தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது (குறள், 7)

என்கின்றார்.

மனக்கவலை தீர்த்தல் என்று கூறாமல், மாற்றல் என்றார். தீர்த்தல் என்றால் துன்ப நீக்கத்தை மட்டுமே உணர்த்தும். மாற்றல் என்றதனால் துன்ப நீக்கத்தோடு இன்ப ஆக்கத்தையும் உணர்த்துகின்றார்.

திருஞானசம்பந்தரும் பூம்பாவையின் எலும்பை உயிர்ப்பிக்கப் பாடிய திருமயிலாப்பூர்ப் பதிகத்தில்,

''கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்''

(2 : 47 : 4)

என்று கூறியருள்வது இவ்விழா மிகப் பழங்காலத்திலிருந்தே கொண்டாடப்பட்டு வருகின்றது என்பதை உணர்த்தும்.

மார்கழிமாதம் பௌர்ணமியை ஒட்டித் திருவாதிரை நட்சத்திரம் வரும். நடராஜரை இந் நாளில் வழிபடவேண்டும் என்று காரண ஆகமம் கூறும். திருவண்ணாமலையில் கார்த்திகை விழா சிறப்பாகக் கொண்டாடப்படுவது போல, சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரைவிழா சிறப்பாகக் கொண்டாடப்படும். சிதம்பர நடராஜருக்கு வருடத்திற்கு ஆறு நாட்கள் சிறப்பான அபிடேகம் நடைபெறும். அதில் ஒன்று மார்கழித் திருவாதிரை திருநாள் ஆகும். (ஏனைய நாட்கள், சித்திரைத் திருவோணம், ஆனி உத்திரம், ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில் வளர்பிறை சதுர்த்தசி திதி நாட்களாகும்). திருவாதிரைத் திருவிழா நடைபெறும் பொழுது, முதல்நாள கொடியேற்றி மாணிக்கவாசகரை எழுந்தருளப் பண்ணி அபிடேகம், அலங்காரம், நிவேதனம் முதலியன முறைப்படி செய்திட்டுத் திருவெம்பாவை 20 பாடல்களையும் ஓதி ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தீபாராதனை எடுப்பர். தேவாரம் முதலிய இதரத் திருமுறைகளுக்குத் திருக்காப்பிட்டுத் திருவெம்பாவை ஓதுவர். திருவாதிரை பத்தாம் திருநாளன்று நடராஜர் திருவுருவத்தின் முன் ஒரு பசு நிறுத்தப்படும். அஃது இறைவன் மீளவும் உவகைப் படைத்தல் உயிர்களின் பொருட்டு என்பதை உணர்த்தும். காராம்பசு இருள் போன்ற மலப் பற்றுடைய உயிர்களைக் குறிக்கும். மேலும் அப் பசு கூத்தப் பெருமானின் திருவுருவத்தை நோக்கி நிறுத்தப்படாமல், பின்முதுகைக் காட்டி நிறுத்தப் படும். அஃது உயிர்கள் திருவடி இன்பத்தை விரும்பாமல், உலகவின்பத்தை விரும்புவதைக் குறிக்கும். சுப்பவின் முன் தரையில் ஒரு தட்டில் உணவு வைக்கப்பட்டிருக்கும். அஃது உயிர்கள் வினைப் பலன்களை அனுபவிப்பதைக் குறிக்கும் (உணவு - வினை). உணவுப் பாத்திரத்திற்குச் சற்றுமேலே, ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி பொருத்தப்பட்டிருக்கும். அதில் கூத்தப் பெருமான் உருவமும், பசுவின் உருவமும் செம்மையாகத் தெரியும். உலக வாழ்வில் அழுந்திக் கொண்டிருக்கும் உயிர், அதிலேயே உழலாமல், தன்னைப் பற்றி ஆராயத் தொடங்கினால், தன்னுடைய தன்மையையும், ஐந்தொழில் செய்யும் இறைவனின் தன்மையையும் தெளிவாகக் காணும் என்னும் கருத்து ஆகும். அன்று, இறைவனின் அருட்பேறாகக் கருநிறச் சாந்து அளிக்கப்படும். அஃது இறைவன் உயிர்கட்கு மலசார்பினால் ஆகிய உலக வாழ்வை அருள்கின்றான் என்னும் கருத்தாகும். நடராஜருக்குக் கற்பூர தீபம் காட்டப்படும் போது, காராம்பசு இறைவன் சந்நிதியை நோக்கி நிற்கும். இஃது உயிர்கள் உலகவாழ்வில் உழன்றாலும் இறைவனை மறவாது வழிபடல் வேண்டும் என்பதை உணர்த்தும். மார்கழியில் திருப்பள்ளி எழுச்சி பாடுவதன் உட்கருத்து, நாம் அருள்வழியில் நிற்கும் பொருட்டு, இறைவன் நம் உள்ளத்தில் எழுந்தருளுமாறு அவனை வேண்டுதலாகும். தில்லையில் இவ்விழா சிறப்பாக நடைபெற்றதை,

''ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேனார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே''

என்ற பாடலாலும் அறியப்படும்.

தில்லையில் மட்டுமல்லாமல், பஞ்ச சபை என்று போற்றப்படும் ஏனைய தலங்களான மதுரை, திருநெல்வேலி, திருக்குற்றாலம், திருஆலங்காடு முதலிய இடங்களிலும் இவ்விழா சிறப்பாக நடைபெறும். மேலும் எல்லாச் சிவன் கோயிலிலும் நடராஜர் சந்நிதியில் இவ்விழா சிறப்பாக இன்றும் கொண்டாடப்படுகிறது.

திருப்பெருந்துறையிலும், திருவுத்தரகோச மங்கையிலும், பேரூரிலும் சிறப்பாக நடைபெறும். மார்கழித் திருவாதிரையில் உமையம்மை கண்டு மகிழ இறைவன் திருக்கூத்து ஆடினதால் நாமும் அந்நாளில் கூத்தப்பிரான் தரிசனம்கண்டு குதூகலிக் கின்றோம். நடராஜப் பெருமான் பதஞ்சலி, வியாக்கிர பாதர் முனிவர்கள் காணப் பொன்னம்பலத்தில் ஆடி னார். மதுரையில் கால்மாறி ஆடினார். திரு உத்தர கோச மங்கையில் பார்வதிக்கு முதன் முதலில் ரகசியத் தாண்டவம் அறையில் ஆடிக் காட்டினார். இங்கு ரகசியமாக ஆடிக்காட்டியதால் மரகத நடராஜர் சந்தனத்தில் ரகசியமமாக மறைந்துள்ளார். மார்கழி திருவாதிரைக்கு முந்தின நாள் பகல் 12 மணிக்குச் சந்தனம் களையப்பட்டுப் பச்சையாய்க் காட்சியளிப் பார். அதன்பின் பல்வேறு அபிசேகங்கள் நடை பெறும். மறுநாள் அருணோதய காலத்தில் ஆருத்ரா தரிசனம் நடைபெறும். பின் ஆண்டு முழுவதும் நடராஜப் பெருமான் சந்தனக் காப்பிலேயே இருப் பார்.

மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் காலை 4 மணிக்கே நடை திறக்கப்படும். திருவாதிரையோடு முடிவடையும் 10 நாள் எண்ணெய்க் காப்பு விழா வும், அதே 10 நாட்களில் மாணிக்கவாசகப் பெருமானை எழுந்தருளச் செய்து திருவெம்பாவை இசை முழங்கச் செய்யும் விழாவும் இனிதே நடைபெறுகின்றன. இந்த விழாவின் தொடக்கநாளில் மீனாட்சியம்மன் காலை 6 மணிக்குப் புது மண்டபத்துக்கு எழுந்தருளித் தைலக்காப்பு, தீபாராதனை முடிந்தபின் சித்திரை வீதிகளில் வலம்வந்து கோயிலுக்குள் வந்து சேரும். ஒன்பதாம் நாளிலும் காலையில் புது மண்டபத் துக்கு எழுந்தருளி, சாயரட்சையில் அபிஷேக, தீபா ராதனைகள் முடிந்து கனக தண்டியலில் அலங்கார மாகி மாலையில் சித்திரை வீதியில் உலா நிகழும்.

கேரளாவிலும் திருவாதிரை விழா கொண் டாடப்படுகின்றது. திருமணமான பெண்கள் தங்கள் கணவனின் நீண்ட ஆயுளுக்காகவும், கன்னிப் பெண் கள் நல்ல கணவனைப் பெறவும், அடியார்கள் ஆண்டவன் அருளைப் பெறவும் விரதம் இருப்பர். உமாதேவி சிவனைக் கணவனாக அடைய தவ மிருந்ததாகவும், இறைவன் அவருடைய பக்திக்கு மெச்சி, தனுமாசம் திருவாதிரை நாளில் திருமணம் செய்ய இசைந்ததாகவும், அந்நாளே திருவாதிரை நாளாகக் கொண்டாடப்படுகிறது என்பர்.

சேந்தனார் என்னும் வறிய பக்தர் திருவாதிரை நாளில் பொருள் வசதியின்றி, தில்லை நடராஜப் பெருமானுக்கு எளிய களி சமைத்து உண்பிக்க, அவர் அதனை மகிழ்வுடன் உண்டதால், அந்நாள் முதல் நடராஜப் பெருமானுக்கு மார்கழித் திருவாதிரை யில் களி நைவேத்தியம் செய்யும் மரபு இருந்து வருகின்றது. களி - மகிழ்ச்சி. இன்ப வடிவினனான இறைவன் தன்னை வழிபடும் உயிர்கட்கு நன்மை கள் பல தந்து மகிழ்ச்சியையும், இன்பத்தையும் தருவதை உணர்த்தும்.

பழங்காலத்தில் மார்கழித் திருவாதிரை விழா சிறப்பாக நடைபெற மன்னர்கள் கோயில்கட்கு மான்யம் வழங்கியுள்ளதைக் கல்வெட்டுச் செய்தி களால் அறியலாம். திருவிடைமருதூர் மகாலிங்கேஸ் வரர் கோயில் கருவறையில் மேற்குச் சுவரில் முதலாம் பராந்தகன் திருவாதிரை விழா கொண்டாட நிலம் வழங்கிய செய்தி கல்வெட்டில் காணப்படுகின்றது. திருப்பனந்தாளிலுள்ள, அருணகடேஸ்வர கோயில் முதல் பிரகாரத்தின் வடக்குச் சுவரில் விஜயநகர மன்னன் மார்கழி திருவாதிரை விழா கொண்டாட நிலம் வழங்கிய செய்தி கல்வெட்டில் காணப்படு கின்றது. மாயவரம் அருகிலுள்ள சிற்றூரின் வீரட் டானேஸ்வர கோயிலில் மார்கழி திருவாதிரையில் திருவெம்பாவை ஓத ராஜாதிராஜதேவன் என்னும் சோழமன்னன் பணம் வழங்கியதான செய்தி காணப் படுகின்றது. நெல்லூர் ஜில்லாவில் சூலூர் பேட்டை யிலுள்ள நாகேஸ்வரரின் கோயிலின் மேற்குச் சுவரில், விஜயகண்ட கோபாலதேவன் என்னும் மன்னன் மார்கழித் திருவாதிரை கொண்டாட நிலம் வழங்கியுள்ள செய்தி காணப்படுகின்றது.

கடலைக் கையினால் நீந்திக் கரைசேர்ந்தாற் போல ஏழுவகைப் பிறவிகளுள் கிடைத்தற்கரிய மானிடப் பிறவி பெற்றுள்ள நாம், மார்கழித் திரு வாதிரை நாளில் நடராஜப் பெருமானின் திரு நடனத்தை கண்டு தரிசித்துப் பிறவிக்கடலைக் கடந் திடுவோமாக.

''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''

- திருநாவுக்கரசர் தேவாரம், (4 : 81 : 4)

''மோனந்தம் மா முனிவர் மும்மலத்தை மோசித்துத்
தான் அந்தம் ஆன இடத்தே தங்கியிடும் - ஆனந்தம்
மொண்டு அருந்த நின்று ஆடல் காணும் அருள்
மூர்த்தியாம்
கொண்ட திரு அம்பலத்தான் கூத்து''

- உண்மை விளக்கம், செய்யுள், 37.

***

# பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம்

- **திருமதி த. காவேரி,** பி.ஏ., பி.எல்.
உதவி ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில், சென்னை.

பாண்டிய நாடே 'பழம்பெரும்பதி' என்ற பாராட்டைப் பெற்றதாகும். இப்பாண்டித் திரு நாட்டில் பதினான்கு திருப்பதிகள் முதன்மை வாய்ந்தவை. அவை தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் ஆகும்.

கூடல் புனவாயில், குற்றாலம், ஆப்பனூர்,
ஏடகம், நெல்வேலி, இராமேசம், - ஆடனை
தென்பரங்குன்றம், சுழியல், தென்திருப்புத்தூர்,
காளை
வன்கொடுங்குன்றம், பூவணம்.

பாண்டிய நாட்டின் பழம் பெருமைக்குச் சான்றாக விளங்குவது மதுரை. இப்பாண்டித் திருநாட்டின் எழிலாரும் முகமெனப் புகழ்பெற்று விளங்குவது இம்மதுரையே ஆகும். திருநகரச் சிறப்பினைப் பாட வந்த பரஞ்சோதியார் இக் கருத்தினை உள்ளடக்கி,

மங்கலம் புனை பாண்டி நாடாகிய மகட்குச்
சங்கலம் புகை தோளிணை தடமுலை ஆதி
அங்கமாம் புறம் தழுவிய நகரெலாம் அனைய
நங்கை மாமுகம் ஆகிய நகர்வளம் பகர்வாம்.

என்று பாடுகின்றார்.

சோமசுந்தரக் கடவுள் கோயில் கொண்டுள்ள பெருந்தலம் இம்மதுரையே. திருஞானசம்பந்தரால் பத்துப் பதிகங்களும், திருநாவுக்கரசரால் இரண்டு பதிகங்களும் பாடப்பெற்ற சிறப்பு வாய்ந்தது.

கருணைக் கடலாகிய சோமசுந்தரப் பெருமான் 64 திருவிளையாடல்களை நடத்திய இடம். அரச ராயும், புலவராயும் வீற்றிருந்த மேன்மை மிக்கது. செந்தமிழ் வளர்க்க நல்லிசைப் புலவர் ஒருங்கிருந்து சங்கம் நடத்திய சிறப்புடையது.


மதுரையின் பெருமைகளை எடுத்துரைக்கின் விரியும். இத்தலத்திற்கு மதுரை, நான் மாடக் கூடல், திருஆலவாய், கடம்பவனம், துவாதசாந்த புரம், பூலோக கைலாயம், சிவராஜதானி, கன்னி புரீசம், ஜீவன் முக்திபுரம், சிவநகரம் எனப்பல பெயர்கள் உண்டு.

ஞானசம்பந்தரும், மங்கையர்க் கரசியாரும், குலச் சிறையாரும், நெடுமாற நாயனாரும் எழுந்தருளிய இடம். மாணிக்கவாசகர் பொருட்டுப் பல திருவிளையாடல்கள் இங்கு இறைவன் நிகழ்த்தினார். குமரகுருபரர் பிள்ளைத் தமிழ் பாடியதும் இங்கு தான். இந்திரன், வருணன், முருகன், விநாயகர் போன்றோர் வழிபட்டுப் பேரின்பம் எய்திய இடம். இங்கு இராசசேகர பாண்டியன் பொருட்டுப் பெருமான் வெள்ளி மன்றுள் கால்மாறி ஆடினார். இங்குள்ள விமானம் இந்திரனால் கொண்டு வந்து வைக்கப்பட்டுப் பூசிக்கப் பெற்ற சிறப்புடையது. எட்டு யானைகளால் தாங்கப் பெறுவது.

இங்குள்ள இறைவனுக்கு அட்டாலைச் சேவகன், அடியார்க்கு நல்லான், அதிரவீசி ஆடுவான், அபிடேகச் சொக்கன், பண்ணிசைச் சொக்கன், முதலான பெயர்களும் உண்டு. இறைவிக்கு அபிஷேகவல்லி, அங்கயற்கண்ணி, தமிழ் அறியும் பெருமாட்டி என்ற பெயர்கள் உண்டு.

வேதங்களிலும் உபநிடதங்களிலும் புராணத்தின் சிறப்புச் சொல்லப்பட்டுள்ளது. புராணங்கள் வேதங்களோடு தோன்றிய காரணத்தால் புராணத்தை வேதம் என்றே பல வடமொழி நூல்கள் தெரிவிக்கின்றன. இப்புராணக் கதைகளைக் கேட்போர் நீண்ட ஆயுளைப் பெறுவர் என்ற எண்ணம் பண்டை மக்களிடம் இருந்தது. சாதிச் சண்டை, மொழிச் சண்டை, சுயநலம் முதலியன நீங்க, இப்புராணக் கதைகள் பெரிதும் பயன்பட்டன.

திருஆலவாய் மான்மியம் என்றழைக்கப் படும் திருவிளையாடற் புராணத்தைப் பரஞ்சோதி முனிவர் இயற்றினார். இந்நூல் இறைவனின் அறுபத்து நான்கு திருவிளையாடல்களை விரிவாகப் பேசுவது. பெரும் பெற்றப் புலியூர் நம்பி என்பவர் இயற்றிய வேறு ஒரு திருவிளையாடற் பராணத்தில் இருந்து வேறுபடுத்தி அறியவே இதற்கு ஆலவாய் மான்மியம் என்ற பெயர் ஏற்பட்டதெனலாம். இருப்பினும் தற்காலத்து அறிஞர் இதனைப் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் என்றே அழைக்கின்றனர். மதுரைப் புராணம் என்ற வேறு பெயரும் உண்டு.



மதுரைப் புராணத்தில் சோம சுந்தரப் பெருமானின் செயற்கரும் செயல்கள், வியத்தகு நிகழ்ச்சிகள், மதுரைப் பெருமானோடு தொடர்புடைய அரசர்கள், அடியார்கள், பறவைகள், விலங்குகள் உள்ளிட்ட அருட் செயல்களை உட்படுத்திப் பழம் கதையோடு புதுமெருகேற்றி இப்புராணத்தைப் பாடியுள்ளார்.

திருவிளையாடற் பராண ஆசிரியரான பரஞ்சோதி முனிவர் தென்மொழி, வடமொழி, திருமுறைகள், சித்தாந்த சாஸ்திரங்கள் இவற்றை ஐயம் திரிபு அறக் கற்றவர். தம் தந்தையிடம் முறையாகத் தீட்சை பெற்றவர். சிவ பக்தியும் அடியார் பக்தியும் மிக்கவர். அங்கயற்கண்ணம்மை திருவடியில் மிக்க அன்பு பூண்டவர். அதனால் தான் 'சக்தியாய்' என்று தொடங்கும் காப்புச் செய்யுளுடன் நூலைத் தொடங்குகின்றார்.

இவர் சிவபெருமான் திருக்கோயில் கொண்டிருக்கும் பல தலங்களுக்குச் சென்று, தரிசித்து மதுரையை அடைந்து, அங்கயற் கண்ணம்மையுடன் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரப் பெருமானைத் தரிசித்து, அங்கு தங்கி இருந்தார். அப்போது மீனாட்சியம்மை தன் கனவில் தோன்றி எம்பெருமானின் திருவிளையாடல்களைப் பாடுவாய் என்று பணித்தார். அப்பணியைத் தலைமேற்கொண்டு, இந்நூலைப் பாடி முடித்தார். சொக்கேசர் சந்நிதியில் அறுகாற் பீடத்திலிருந்து (பாடல் எண். 21) இதனை அடியார்களும் புலவர்களும் கூடிக் கேட்க அரங்கேற்றினார் என்பர்.

திருவிளையாடற் புராணம் முருகப் பெருமானால் அகத்தியருக்கு அருளப் பெற்றுப் பின்னர் அகத்தியரால் பிற முனிவர்கள் அறிந்தனர்; அவர்கள் சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டுப் பூசித்தனர் என்று இப்புராணம் கூறுகின்றது.

இறைவனின் அருள் விளையாடல்கள் அறுபத்து நான்கு என்பது பண்டைக் காலம் தொட்டு வந்த ஒரு மரபு.

கதை நிகழுமிடமோ சங்கத் தமிழ் வளர்த்த மதுரையாகும். இதில் உள்ள மாந்தரோ தமிழ் மண்ணினர்.

இம்மாமதுரைக் கூடலில் இறைவன் நிகழ்த்திய திருவிளையாடல்களில் முதன்மையானது ''இந்திரன்' பழிதீர்த்த படலம்'' என்பதாகும். அதனை அடுத்துக் காண்போம்.

*(தொடரும்)*

***

# மாத்தூர் மகிஷாசுரமர்த்தினி

- பொறிஞர் ஜி. வெங்கடேசன், M.E., H.T.E.,
செயற்பொறியாளர், இந்துசமய அறநிலையத்துறை, சென்னை - 34.

புனித பாரத பூமியெங்கும் அன்னையின் அருளாட்சிதான். 'எங்கெங்கு காணினும் சக்திதான்.' அவள் எங்கு குடியிருப்பினும் அத்தலத்தினை ஆட்சி செய்யும் நாயகி ஆகிறாள். உலகங்கள் யாவற்றையும் கடைக்கண் அருட்பாவையினால் காக்கின்ற தெய்வம் அம்பிகை.

### அன்னையின் திருவுருவ வெளிப்பாடு

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி வட்டம் பத்தூர் கிராமத்தில் *1954*-ஆம் ஆண்டு அரக்கோணம் - ரேணிகுண்டா இரண்டாவது இருப்புப்பாதை போடும் பணி நடைபெற்ற போது, சக்தி மேடு என்ற இடத்தில், கூலியாட்கள் கடப்பாறையால் மண்ணைப் பெயர்த்தார்கள். ஒரு கூலியாள் கடப்பாறையால் பூமியைக் குத்தியபோது 'டங்' என்று வெங்கல சப்தம் கேட்டது. அக்கூலியாள் தெய்வ அருளால் மயக்க மடைந்தான். கூட்டம்கூடி மண்ணை அகற்றினர். ஆம். அங்கு தான் அன்னையின் கம்பீரமான திருவுருவம் எந்தவித சிதைவும் இன்றி மீட்கப்பட்டது.

### மகிடாசுரனும் மாத்தூர் அம்மனும்

எருமையின் வடிவம் கொண்ட அசுரன் ஒருவன் பலகாலம் தவமிருந்து பல்வேறு வரங்களுடன், ஒரு பெண்ணால் மட்டுமே தனக்கு மரணம் வரலாம் என்று வரம் பெற்றிருந்தான். பெற்ற வரத்தால் தேவர்களை வாட்டி வதைத்தான். தேவர்கள் அந்த அசுரனை அழித்து தங்களைக் காக்க எல்லாம் வல்ல அம்பிகையை வேண்டினர். மகிடாசுரனை வதைக்க தேவி புறப்பட்டாள். பராசக்தியே வந்திருப்பது தெரியாமல் 'நீ என்னைத் திருமணம் செய்து கொண்டால் அகில உலகத்திற்கும் தலைவி ஆகலாம்' என்று பிதற்றினான். அம்பிகை ஒன்பது நாட்கள் மகிடனுடன் போர் புரிந்து ஒன்பதாம் நாள் மகிடாசுரனின் ஆணவத்தை அழித்து மகிடனை வதம் புரிந்தாள். இவ்வாறு தேவர்கட்கும் உலக மக்களுக்கும் நலம் விளைவித்து மகிடாசுரமர்த்தினி ஆனாள்.

எட்டு கரங்களுடன் சிம்ம வாகனத்தில் வந்த அன்னை மகிஷனை வதைத்து ஆனந்தத் தாண்டவம் புரிந்தார். எங்கும் காண்பதற்கரிய இத்திருக்கோலத்துடன் மகிஷாசுரமர்த்தினி அம்மன் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளாள். இக்கோலத்தை அபிராமிபட்டர்

''சுந்தரி எந்தை துணைவி என்
பாசத்தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தினாள் மகிடன் தலைமேல்
அந்தரி நீலி அழியாத கன்னிகை ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள் மலர்த்தாள் என் கருத்தனவே''

என்று பாடியுள்ளார்

### அன்னையின் அருள் வடிவம்

எட்டு கரங்களில் சங்கு, சக்கரம், வில், அம்பு, கத்தி, கேடயம், திரிசூலம் மற்றும் கபால மாலை ஆகியவற்றைத் தரித்து மகிடாசுரனை தனது திரிசூலத்தால் குத்தி வென்ற அருட் பார்வையால் உலகினை நோக்கும் சாந்த வடிவுடன் அன்னை அருளாட்சி புரிந்து வருகிறாள். ஏழு அடிக்கும் மேல் நெடிதுயர்ந்து மகிடாசுரனின் தலைமேல் அன்னை ஆனந்த நடனம் புரியும் காட்சி காண்பவர்க்கு பக்திப் பரவசத்தை ஊட்டடி மீண்டும் மீண்டும் பார்க்கத் தூண்டி மெய் சிலிர்ப்பை ஏற்படுத்தும்.

### மகிஷாசுரமர்த்தினி தத்துவ விளக்கம்

கடுமையான தவம் புரிந்து கிடைப்பதற்கரிய, வரங்களைப் பெற்றாலும் பெற்றதன் நோக்கம் நல்லதாக இல்லாவிட்டால் அழிவு நிச்சயம் என்ற உண்மையைத்தான் மகிடாசுரவதம் விளக்குகறிது. மேலும், மகிடன் எனும் அரக்கனை அழித்து அன்னை அவன் தலைமீது திருநடனம் புரிவது போல் உள்ள அன்னையைத் தூய அன்போடும் பக்தியோடும் வழிபடும் அன்பர்களின் வாழ்வில் ஏற்படும் துன்பம் எனும் அரக்கனை அழித்து, அவர்களின் உள்ளத்தில் அமைதியையும், மனமகிழ்ச்சியையும் ஏற்படுத்துபவளாக அன்னை என்றென்றும் விளங்கி அருள்புரிகிறாள் என்னும் தத்துவத்தை அன்னையின் திருவுருவம் விளக்கி நிற்கிறது.

### ஓலைச்சுவடியில் அம்மன் திருப்பெயர்

வைத்தீஸ்வரன் கோயில் என்ற திருத்தலத்தில் வைக்கப்பட்டுள்ள ஓலைச் சுவடிகளில்




77-ஆம் ஆண்டு ஸ்ரீவைணவ மாநாட்டைச் சென்னையில் மாண்புமிகு நீதியரசர் திருமிகு E. பத்மநாபன் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். மாநாட்டுத் தலைவர் திருமிகு பார்த்தசாரதி ராமாநுசதாச சுவாமிகள், சங்கத் தலைவர் திருமிகு பள்ளிகொண்ட பெருமாள், சங்கச் செயலாளர் திருமிகு வேணுராச நாராயணன் மற்றும் பொருளாளர் திருமிகு ராமாநுஜம் ஆகியோர் உடன் உள்ளனர்.

மாத்தூர் அம்மனின் திருப்பெயரையும், அம்பிகைக்கு செய்ய வேண்டிய நேர்த்திக் கடனையும் பார்த்துத் தெரிந்து கொண்டு, பின்பு இவ்வாலயம் வந்து விரதமிருந்து அன்னையை வழிபட்டு அவளது திரு வருளைப் பெற்று வாழ்வில் வளமும் நலமும் பெற்றவர்கள் மிகப் பலர் ஆவர்.

கற்பனைக்கும் எட்டாத அருளைத்தரும் அன்னை திருத்தணி - திருப்பதி நெடுஞ்சாலையில் திருத்தணியில் இருந்து 8 கி.மீ. தூரத்தில் உள்ள பொன்பாடி இரயில் நிலையத்தில் இருந்து மேற்கே 2 கி.மீ. தூரத்தில் கோயில் கொண்டுள்ளாள்.

இத்திருத்தலம் 64 சக்தி பீடங்களுக்கு இணை யாக வைத்துப் போற்றப்படுகிறது. இக்கோயிலில் உள்ள வேப்ப மரத்தின் வேப்பிலை கசப்பதில்லை என்பது தனிச்சிறப்பாகும்.

இங்கு ஒவ்வொரு செவ்வாயன்று செய்யப் படும் இராகு கால பூஜையும், வெள்ளி, ஞாயிறு அன்று செய்யப்படும் இராகு கால சிறப்பு அர்ச்சனை களும் மிகவும் சிறப்பானவை. அன்று பக்தர்கள் கூட்டம் அலைமோதும்.

நவராத்திரி விழாவின் ஒன்பது நாட்களி லும், நிகழும் சிறப்புப் பூஜைகள், சந்தனக் காப்பு, மஞ்சள் காப்பு, விபூதி காப்பு, மலர் அலங்காரம், தேங்காய் பூ அலங்காரம் இவற்றைக் காணக் கண் கோடி வேண்டும்.

உலகம் போற்றும் சிறப்பும் பெருமையும் மிக்க மாத்தூர் மகிஷாசுரமர்த்தினி துன்பங்களில் இருந்து காப்பவளும், துன்பங்களை விடுவிப்ப வளும் அவளே! அவளை அண்டியவருக்கு துன்பத் தின் சாயல் கூட தொடராது. தாரித்திரியம், துக்கம், பயம் இவற்றை போக்கி உலகுக்கு உபகாரம் செய்பவளே மாத்தூர் மகிஷாசுரமர்த்தினி.

இவ்வாலயம் வந்து விரதமிருந்து அன்னையை வழிபட்டு அவளது திருவருளைப் பெற்று வாழ் வில் வளமும் நலமும் பெற்றவர்கள் மிகப்பலர். நாமும் அவள் அடி தொழுது தீங்கற்ற பெருவாழ்வு வாழ்வோமாக!

அன்னையை தரிசிப்போம்!
ஆனந்தப் பெருவாழ்வு அடைவோம்!

***

# வந்தருள் மகர மாதேவீ

- திருவரங்கம் ரங்கமணிப்பாட்டி

1) பொங்கலெனும் நல்ல நாளிதுவே - உயர்
புண்ணிய காலமும் தானிதுவே
மங்கலத் தையொரு திங்கள் வந்ததென்று
மக்கள் மகிழ்ந்திடும் நாளிதுவே
செங்கமலத் தமர் அன்னை கருணையிற்
செந்நெல் விளைந்திடும் தையிதுவே
செங்கரும்பு மஞ்சள் இஞ்சி குருத்துடன்
சேர்ந்து விளையும் தையிதுவே.

2) மகரசங்கிரம தேவியவள் தன்
மனம் கனிந்து வரும் நாளதனிற்
அகில முழுவதும் அன்னை வருகையை
ஆனந்தமாகக் கொண்டாடிடுவோம்.
சகந்தனில் ஒன்றுமை என்னும் வரத்தை
தேவீ அளித்திடு என்றிடுவோம்
சுகமுடனிருக்க உன்னருள் தாவென
சொல்லி அவள் மலரடி நாம் பணிவோம்.

3) உத்திராயணம் என்றுரைப்பார் - தேவர்
உகந்திடும் உதய காலமென்பார்
நித்தியம் உதயம் ஆகிவரும் ஒளி
ஞாயிறும் வடக்கில் செல்லுமென்பார்
சத்திய மூர்த்தியாம் தேவன் ஆதித்தனை - சித்த
சுத்தியுடன் பூசை செய்யுமென்பார்
உத்தமமான பாற்சோறு படைத்துமே
உலகத்தொளியை வணங்கு மென்பார்

4) வெள்ளி முளைத்தெழும் முன்னே எழுந்து
வீதியிற் சாணம் தெளித்துவிட்டு
பள்ளி வைத்து வண்ணக் கோலமிட்டு - பறங்கி
பூவும் வைத்து சுற்றியே செம்மண் இட்டு
புள்ளினம்போல சிறுவர் சிறுமியர்
புடை சூழ நின்று கும்மாள மிட்டு
வெள்ளிச் சம்பாவினை நெற்கதிர் - மாவிலை
விளங்கிட தோரணம் கட்டிடுவோம்.

5) சுத்தமாய் நீராடித்தான் வருவோம்
தூய்மனத்தோடு நாமிருப்போம்
புத்தம் புதிய ஆடை உடுப்போம்
பூமுடித்து கூந்தல் அலங்கரி ப்போம்
மெத்தவும் பயபக்தியும் சித்த
சுத்தியுமாகவே பொங்கல் வைப்போம்
அத்தனவன் திருவரங்கர் தாம் நம்மை
ஆண்டருள் செய்வானென்றிருப்போம்.

6) செந்நெல் அரிசியும் சிறுபருப்பும் - கூட
சேர்த்துமே பக்குவமாய்ச் சமைத்து
கன்னலும் கற்கண்டும் நறுமண நெய் பால் - ஏலம்
கலந்துமே சர்க்கரைப் பொங்கலிட்டு
கண்ணனெனும் திருமால் அவர்க்கே
இது காண்! எனச் சொல்லி சமர்ப்பிவித்து - தம்
மன்னவர் அகத்தில் மக்களுடன் கூடி
மங்கையர் வாழ்ந்திடும் திங்களிது.

7) வாங்கக் குடம் நிறை வள்ளற் பசுக்களை - சுற்றி
வலம் வந்து கோ பூசை செய்திடுவோம்
தங்கிடும் ஆவினக் கொட்டிலிலே பொங்கல்
இட்டுமே மாட்டுப் பொங்கலென்போம்
மங்கள மாகவே மஞ்சளைப் பூசியே
குங்குமமிட்டு கொம்பிற்கு வண்ணமிட்டு
சங்கு மணியுடன் சிலுசிலுக்க வரும்
சுரபிக்கு திருஷ்டி கழித்திடுவோம்

8) பட்டர்பிரான் கோதை பாடியருள் திருப்
பாவையும் பூர்த்தியாம் நாளுமிது
இட்டமுடன் நோன்பு நோற்றிடும் மங்கையர்க்
கின்னருள் தந்திடும் திங்களிது
கட்டழகியாம் கன்னியர்க்கும் இளம்
காளையர்க்கும் முடி போடுதற்கு
திட்டமுடனே செல்வக் கல்யாணம்
செய்வதற்கு உகந்த மாதமிது.

9) மங்கள மகர மா தேவீ அவள்
பொங்கல் திரு நாளில் வந்த பின்பு
சங்கடங்கள் தீரும் - செந்நெல் விளைந்திடும்
சக்தி அவள் தன் பார்வையிலே
இங்கும் எங்கும் சுகம் பெறவே அந்த
பங்கயத்தாளைப் பதம் பணிவோம்
பொங்கிடும் மங்களம் எங்கும் நிறைந்திட
வந்தருள் மகர மாதேவீயம்மா!

***

# பகவான் விரும்பி ஏற்ற சிஷ்ய பாவங்கள்

- இந்திரா ஆரா அமுதன், ஸ்ரீரங்கம்

''நாம் ஓர் அடி முன்னாடி எடுத்து வைத்தால், அவன் பத்து அடி கீழ் இரங்கி வருவான்.'' என்று பகவானின் கல்யாண குணங்களில் ஒன்றான ஸௌலப்யம் என்கிற எளிமைக்கு உதாரணம் சொல்வார்கள்.

உலகத்தை ஆட்டிப் படைக்கும் சூத்ரதாரியாக அவன் இருக்கிறான். இருந்தாலும் தானும் நடிக்க வேண்டும் என்ற தணியாத ஆசை கொண்ட திருமால் ஒரு ஆழ்வாருக்கும், ஒரு ஆசாரியனுக்கும் சிஷ்யனாக நடந்துகாட்டி தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்ட இரு நகழ்ச்சிகளைப் பார்ப்போம்.

ஆழ்வார்களில் கடைசி ஆழ்வார் திருமங்கை ஆழ்வார் என்பது எல்லாரும் அறிந்த விஷயம். பகவானின் சார்ங்கம் என்னும் வில்லின் அம்சமாக அவதரித்தவர் ஆவார். இவர் சோழ மன்னனின் படைத் தலைவனாக இருந்து பல வெற்றிகளை அரசனுக்கு பெற்றுத் தந்ததால் இவருக்கு ஆலி நாட்டை தந்து திருமங்கை என்றும் பதியை தலை நகராக அமைத்து வாழும்படி சொல்லி பரகாலன் என்ற பட்டத்தையும் சோழஅரசன் அளித்திருந்தான். போர் செய்வது என்பது இவனுக்கு மிகவும் பிடித்த தொழில். இதிலிருந்து இவரை ஆன்மீகத்திற்கு மாற்றுவதற்கு பகவான் நடத்திய நாடகம் கீழே காணலாம்.

சுமங்கலி என்ற தேவமாது இமயமலையின் வளங்களைக் கண்டு களித்தபடி வந்தாள் தன் தோழிகளுடன். அங்கே கபில முனிவர் தன் சீடர்களுக்கு பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அவரது சீடர்களில் ஒருவர் விகார வடிவத்துடன் இருந்ததைப் பார்த்த சுமங்கலிதான் ஒரு தேவமாது என்றும், அழகி என்றும் கர்வத்துடன் அவனை ஏளனமாக கேலி செய்தாள். இதனைக் கண்ட கபில முனிவர் கோபத்துடன் அவளுக்கு சாபம் இட்டார். அவள் பின் வருந்தி மன்னிப்பு கேட்டாள். சாப விமோசனமாக அவள் வேண்டி மன்னிப்புக் கேட்டதால், அதற்கு அவர், ''பரகாலரது மனைவியாகி, அவனுடைய போர்க்குணத்தை மாற்றி நல்ல அடியாராக திருத்திவிட்டு, அவனுடன் வாழ்ந்துவிட்டு பின் பொன்னாட்டை வந்து அடைவாயாக'' என்று அருளினார்.

அதன்படி அவள் திருநாங்கூர் திவ்ய க்ஷேத்திரத்தில் உள்ள ஒரு பொய்கையில் குமுத மலர் அருகில் ஒரு குழந்தையாகத் தோன்றினார். அந்த ஊரில் வசித்து வந்த ஒரு மருத்துவருக்குக் குழந்தை பாக்கியம் இல்லை. எதேச்சையாக இக்குழந்தை யாருமில்லாமல் தனியாக இருப்பதை கண்டு, எடுத்து வந்து தன் மனைவியிடம் கொடுத்து குமுதவல்லி என்ற பெயர் சூட்டி வளர்த்து வந்தார்.

இவள் அழகில் மயங்கிய திருமங்கை ஆழ்வார் இவளை மணம் புரிய விரும்பினார். ''திருவிலச்சினையும், திருநாமமும் அணிபவரையே மணந்து கொள்வேன்'' என்று நிபந்தனை போட்டாள் குமுதவல்லி.

திருமங்கை ஆழ்வாரும் திருநறையூர் நம்பியிடம் பஞ்ச சம்ஸ்காரம் பெற்றுக் கொண்டு, பன்னிரண்டு திருநாமங்களையும் சாற்றிக்கொண்டு வந்தார்.

இது போதாதென்று சொல்லி, 1 வருட காலத்திற்கு தினமும் ஆயிரத்தெட்டு ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அன்னமிட வேண்டும். அப்படிச் செய்தால் தான் மணம் செய்து கொள்வேன் என்ற குமுதவல்லியின் இன்னொரு நிபந்தனையையும் திருமங்கை மன்னன் ஒப்புக் கொண்டதால் திருமணம் நடந்தேறியது.

தினம் ஆயிரத்தெட்டு பேருக்கு அன்னதானம் செய்ய வேண்டி இருந்ததால் இவர் கப்பப் பணம் கட்டுவது நின்றுபோனது. சோழமன்னன் இவரை சிறைபிடித்து வருமாறு சேனாதிபதியிடம் சொன்னார். இவர் ஆடல் மா என்கிற குதிரையின் உதவியால் சேனாதிபதியை விரட்டி விட்டார். எல்லாரையும் தோற்கடித்ததைக் கண்ட அரசன் இவரது வீரத்தை பாராட்டியபடியே அமைச்சர்களுக்கு இவ்வாறு கட்டளையிட்டார். தரவேண்டிய பணத்தை தருமாறு கேட்டு அதுவரை அவரைக் காவலில் வைக்குமாறும் அரசன் பிறப்பித்த கட்டளைப்படி அமைச்சர்கள் இவரை சிறையில் அடைத்தனர். இவ்வாறு இவரை ஒரு கோயிலில் சிறை வைக்க, இவரும் 3 நாட்கள் உணவின்றிக் கழித்தார்.

இவரை ஆட்கொள்ளவேண்டிய தருணம் வந்துவிட்டதை எண்ணி காஞ்சி பேரருளாளன் இவரது கனவில் தோன்றி இவரைக் காஞ்சிபுரத் திற்கு வந்தால் பணம் தருவதாக அறிவித்தார். இதை இவர் அமைச்சரிடம் சொல்ல, அமைச்சர் அரச னிடம் விண்ணப்பித்தார். அரசனும் உடன்பட்டு தக்க காவலுடன் பரகாலனை காஞ்சிபுரத்திற்கு அனுப்பிவைத்தார். காஞ்சிபுரத்தில் புதையல் பொருள் இல்லாததைக் கண்டு பரகாலன் மனம் வருந்த, மறுபடி அவர் கனவில் தோன்றி வேகவதி நதிக் கரைக்கு வரும்படி பகவான் சொல்ல, இவர் வேகவதி நதிக்கரை மணலைத் தொட்ட மாத்திரத்தில் அவை கள் தங்கமாக மாற சோழ அரசன் வியப்புற்றான். காஞ்சி வரதராஜப் பெருமாள் பணம் தந்ததை கண்டு வியந்து, பரகாலரிடமே அத்தனை பணத்தையும் தந்ததுடன், இன்னும் வெகுமதியையும் அளித்து சோழ அரசன் அவரைச் சிறையில் இட்டதற்காகப் பிராயச் சித்தம் செய்துகொண்டு விடுவித்தான்.

இவ்வாறு இருக்கையில் இந்த செல்வமும் கரைய ஆரம்பித்தவுடன் தன் குலத்தொழிலான வழிப்பறித் தொழிலை செய்து பணம் ஈட்டி வைஷ்ணவர்களுக்கு அன்னதானம் செய்ய முற்பட்ட போதுதான், பெருமாள் பிராட்டியுடன் புது மணத் தம்பதி போல காடு வழியாக இரவில் வரும்போது இவர் அவர்களை மடக்கி அத்தனை அணிகலன் களையும் கழற்றித் தருமாறு விரட்டி ஒரு பெரிய மூட்டையாகக் கட்டிவைத்தார். பகவானின் காலில் உள்ள மோதிரத்தைக் கழற்ற முடியாமல் பல்லினால் கடித்து எடுத்ததால் இவருக்கு ''கலியன்'' என்ற பெயர் பகவானால் சூட்டப்பட்டது.

பின் கட்டி வைத்த மூட்டையை தூக்க முடியாமல் போனபோது பகவானைப் பார்த்து ''என்ன மந்திரம் போட்டாய்? மூட்டையை தூக்க முடிய வில்லையே'' என்று கலியன் சொல்ல, ''என் அருகில் வா. உனக்கு அந்த மந்திரத்தைச் சொல்கிறேன்'' என்று அந்தணனாக வந்த பெருமாள் சொல்ல, ''நீ சொல்லாவிட்டால் இந்த வாளுக்கு இரையாவாய்'' என்று சொல்லி உருவிய வாளுடன் அருகில் சென்றான். அஷ்ட அக்ஷர மந்திரமான ஓம் நமோ நாராயணாய என்கிற திருமந்திரத்தை அவனது வலது செவியில் பகவான் உபதேசித்து காட்சி கொடுத்தவுடன்,

''வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந் துயரிடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி யிளையவர் தம்மோ
டவர் தரும் கலவியே கருதி
ஓடினேன் ஓடியுய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதந் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்

(பெரிய திருமொழி 1 - 1 - 1)

என்கிற பெரிய திருமொழியின் பாசுரத்தை திரு மங்கை ஆழ்வார் அருளிச் செய்தார். கவி பாடும் திறன் வந்தடைந்து நம்மாழ்வாரின் நான்கு பிரபந்தங் களுக்கு இணையாக ஆறுஅங்கமாக ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்கிற நாலு வகை கவி களால் பகவானை துதித்து ''நாலு கவிப் பெருமாள்'' என்கிற பட்டப் பெயரையும் பெற்றார்.

இவர் ஒவ்வொரு க்ஷேத்திரத்தைப் பற்றியும் பாடி வரும்போது திருக்கண்ண மங்கை பெருமாளான பக்தவத்ஸலப்பெருமானைப் பாடி வரும்போது தான் ''என்னுடைய கவியின் பொருள் தெரிய வேண்டு மானால் என்னிடம் கற்றுக் கொள்ளலாம்.'' என்று கீழ்வரும் இந்தப் பாசுரத்தை அருளினார்.

''கண்ணமங்கையுள் கண்டு கொண்டேன்'' என்று
காதலால் கலிகன்றியுரை செய்த
வண்ண வொண்டமி ழொன்பதோ டொன்றிவை
வல்ல ராயுரைப் பார் மதியம் தவழ்
விண்ணில் விண்ணவராய் மகிழ்வெய்துவர்
மெய்ம்மை சொல்லில் வெண்
சங்கமொன்றேந்திய
கண்ண, நின்றனக்கும் குறிப்பாகில்
கற்கலாம் கவியின் பொருள் தானே''.

பெரிய திருமொழி (7.10.10)

இந்தப் பாசுரத்தைச் செவியுற்ற கண்ண மங்கை பெருமாள், ''இப்போது அர்ச்சையாக இருப் பதால் கற்க முடியாது. கலியில் நம்பிள்ளையாக திரு மங்கை ஆழ்வார் அவதரிக்கும்போது தான் பெரிய வாச்சான் பிள்ளையாக அவதரித்து சிஷ்யனாகக் கற்றுக் கொள்வதாகச் சொன்னார்.

இவ்வாறாக கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் நம்பிள்ளை கி.பி. 1147-ல் அவதரித் தார். இவருக்கு இந்த பெயர் வந்த விபரம் பின் வருமாறு. இவரது இயற்பெயர் வரதராஜன் ஆகும். இவருடைய கையெழுத்து முத்துப்போல அமைந் திருந்ததால் நஞ்சீயர் என்ற ஆசாரியர் தன்னுடைய ஒன்பதினாயிரப்படி என்கிற உரையினை பட் டோலை செய்து தருமாறு பணித்தார். அதை எடுத்து வரும்போது காவிரியை நீந்தி தன்னுடைய இல்லத்திற்கு செல்ல நீந்தும்போது காவிரி நதியில் இந்த ஏடு அடித்துச் செல்லப்பட்டது. பெரும் வருத்தம் அடைந்த இவர், நஞ்சீயர் உரை நிகழ்த்தும்போ தெல்லாம் கேட்டிருந்ததால், அந்த நினைவாற்றலைக் கொண்டு தப்பாமல் எழுதியதுடன், சில இடங்களில்

தனக்குத் தோன்றிய அரிய விளக்கங்களையும் சேர்த்திருந்தார். பிறகு நஞ்சீயரிடம் காட்டியபோதுதான் சொல்லாத சில அரிய கருத்துக்கள் இருந்ததை அறிந்த நஞ்சீயர் காரணம் கேட்டார். வரதர் நடந்ததைச் சொல்ல, கேட்டு மகிழ்ந்த நஞ்சீயர் ''இவர் நம்முடைய பிள்ளை, திருக்கலிகன்றி தாசர்'' என்று பெயர் சூட்ட அன்றிலிருந்து இவர் நம்பிள்ளை என்று அழைக்கப்பட்டார்.

வாக்குத்தந்தபடி ஸ்ரீ கிருஷ்ணர் கி.பி. 1167ல் ஆவணி மாதம் கிருஷ்ணாஷ்டமி ரோஹிணி நட்சத்திரத்தில் சேங்கை நல்லூரில் பெரிய வாச்சான் பிள்ளையாக அவதரித்து, ''ராமஸ்ய தக்ஷிணோ பாஹூ'' என்று பெருமாளுக்கு இளைய பெருமாள் போல வலது கையாக இருந்து ஆசார்யனான நம்பிள்ளை உபன்யாஸ வர்ஷங்களையெல்லாம் வியாக்கியானங்களாக ஏற்படுத்தினார்.

''உம்மை ஆசார்யனாக கொண்டு அனைத்து ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் பொருள்களையும், ரஹஸ்யார்த்தங்களையும் உம்மிடமிருந்தே கற்றறிந்து உலகுக்கு வெளிப்படுத்துவேன்'' என்று பகவான் அன்று சொன்னதை நிரூபிப்பதுபோல கிருஷ்ணஸூரி என்கிற பெரிய வாச்சான் பிள்ளையாக அவதரித்து நம்பிள்ளையின் முதன்மையான சீடராக இருந்தார். வியாக்கியான சக்ரவர்த்தியான பெரிய வாச்சான் பிள்ளையை ஸ்ரீராமாயணப் பெருக்கர் என்றும், வால்மீகியின் மறு அவதாரமோ என்றும் எல்லாரும் வியப்பர். பகவான் இவ்வாறு ஆழ்வாருக்கு சீடராக அவதரித்து தன் குருவின் பெருமையை உலகுக்கு வெளிக்காட்டினார்.

விசிஷ்ட அத்வைத மதத்தை ஸ்தாபித்தவர் ஸ்ரீ ராமானுஜர். சோழநாட்டை ஆண்டுவந்த கிருமி கண்ட சோழனின் கொடுமையால் கூரத்தாழ்வான் கண்களை இழந்ததையும், ராமானுஜர் மேல்கோட்டை எனப்படும் திருநாராயணபுரத்தில் சுமார் 20 வருடங்கள் வசிக்க நேர்ந்ததையும் யாவரும் அறிந்த விஷயம். அவ்வாறு அங்கு தங்கியிருந்த சமயத்தில் சமண மதத்தை சேர்ந்த அரசனின் பெண்ணுக்குப் பிடித்திருந்த பிரம்ம ராக்ஷஸனை விரட்டியதுடன், சமணத்திலிருந்து வைஷ்ணவத்திற்கு வந்த அரசனுக்கும் விஷ்ணு வர்த்தனன் என்கிற தாஸ்ய நாமம் சூட்டினார். இதனால் கோபம் அடைந்த சமணர்கள் இவரை வாதத்திற்கு அழைத்தனர். இவர் ஆதிசேஷனின் அவதாரமாக இருந்ததால் ஒரு திரை மறைவில் இருந்து கொண்டு ஒரே சமயத்தில் கேள்வி கேட்ட 12,000 சமணர்களுக்கும் விடை கொடுத்து ஆச்சர்யப்படவைத்ததுடன், தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டவர்களில் சிலர் வைஷ்ணவத்தை ஏற்றுக்கொண்டதும் ஒரு தனி கதை.

''இதை எவ்வாறு செய்தாய்?'' என்று பகவான் ராமானுஜரைக் கேட்ட பொழுது, ''கேட்கிறபடி கேட்டால் பதில் சொல்லுவேன்'' என்று பதிலளித்தார் ராமானுஜர். ராமானுஜருக்கு சிஷ்யனாக இருக்கும் தருணத்தை எதிர்பார்த்தபடி இருந்த பகவானுக்கு, விரைவில் ஒரு சந்தர்ப்பம் கிட்டியது.

மலையாள தேசத்தில் சதத்தாந்தத்தைப் பரப்புவதற்கு வந்தார் உடையவர். இவரது வளர்ச்சியைக் கண்டு பொறாமை கொண்ட சில தீயவர்கள் இவரைக் கொல்வதற்கு சதி செய்தனர். இதை அறிந்த திருக்குறுங்குடி நம்பி அவரை தூக்கி வந்து திருப்பரிவட்டப் பாறை என்ற பாறையின் மேல் கிடத்தினார். தூங்கி எழுந்த உடையவர் வழக்கம் போல தனக்கு பணிவிடை செய்யும் வடுக நம்பியை ''வடுகநம்பி'' என்று அழைத்தார். வடுக நம்பிதான் மலையாள தேசத்தில் இருக்கிறாரே! திருக்குறுங்குடி நம்பியே உடனே வடுக நம்பி போல பணிவிடைகளைச் செய்யலானார். அந்தக் காலத்து வழக்கம் போல குருவே சிஷ்யனுக்கும் பன்னிரு திருமண் காப்புகளை சாற்றுவது உண்டு. அதன்படி வடுக நம்பிக்கு திருமண்காப்புகளைச் சாற்றிக் கோயிலுக்குக் கிளம்பினார் உடையவர். தான் எவ்வாறு திருக்குறுங்குடி வந்து சேர்ந்தோம் என்பதை ஞான திருஷ்டியினால் தெரிந்து கொண்ட உடையவருக்கு உள்ளே மூலவரை சேவிக்கும்போது ஈரப் பசையுடன் பெருமாள் திருமேனியில் சாத்தப்பட்டிருந்த திருமண் காப்புகளைக் கண்டவுடன், இது பெருமாளின் லீலை என்று புரிந்து கொண்டார். பெருமாள் ஆசைப்பட்டபடியே உடையவரை ஒரு சிம்ஹாஸனத்தில் அமர வைத்துவிட்டு, அவருக்கு எதிரில் வாய் பொத்தி கை காட்டி நின்ற பெருமாளின் வலது காதில் மந்திரோபதேசம் செய்வது போல வடிக்கப்பட்ட சிலைகளை இப்போது திருப்பரிவட்டப் பாறையில் நாம் நன்கு தரிசிக்கலாம். இந்த தலங்கள் எல்லாம் இப்போது புதுப்பிக்கப்பட்டுள்ளதால் நாம் வெகு சுலபமாக இந்த இடங்களுக்குச் சென்று தரிசனம் செய்ய முடிகிறது. இதனால் திருக்குறுங்குடி நம்பிக்கு வைஷ்ணவ நம்பி என்றும் வடுக நம்பி என்றும், திருநாமங்கள் உண்டு. ஒரு சிஷ்யன் எவ்வாறு ஆசாரியனிடம் பணிவுடன் இருக்கவேண்டும் என்பதைக் காட்டுவதற்காக பகவான் போட்ட வேடம் இது.

இந்த இரு நிகழ்ச்சிகளின் மூலம் பகவான் தன் அடியார்களான ஆழ்வார்கள், ஆசார்யர்களிடம் எவ்வளவு வாத்ஸல்யம் வைத்திருந்தார் என்பதையும் அடியார்க்கு அடியார் என்பதை மெய்ப்பிக்க அவர் போட்ட சிஷ்ய வேடத்தையும் நாம் அறிந்து கொள்ள நடத்திய நாடகம் என்பதை உணருவோமாக.

***

# திவ்யப்பிரபந்தத்தில் இசை அமைப்பு

-பா.வேங்கடாசாரி

லக்ஷ்மீ நாத ஸமாரம்பாம், நாத யாமுன மத்யமாம்
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்

பாரதிய பண்பாட்டின் அடிப்படை பக்தி நெறி. பக்தியின் எல்லை நிலத்தை கண்ட ஆழ்வார்கள் பன்னிருவர்.

''தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே'' என்று எழுந்தருளி அருள் பாலிக்கும் அர்ச்சாவதாரத்தை அனுபவித்து ''கண்டேன் கண்டேன்'' என்று ஈரத்தமிழில் பாடி அந்த அனுபவத்தில் ஆழ்ந்தவர்கள் ஆழ்வார்கள்.

ஆழ்வார்களுக்குப் பிறகு ஆசார்ய பரம்பரையில், சடகோபர் / நம்மாழ்வார்க்குப் பிறகு ஸ்ரீமந்நாத முனிகள் ஆசார்யராக விளங்குகிறார்.

ஸ்ரீமந் நாதமுனிகள் கடினமான தவம் புரிந்து தனது யோக திசையில் நம்மாழ்வாரிடமிருந்து திருவாய்மொழியை உபதேசமாக பெற்றார். இத்துடன் லுப்தமாயிருந்த (மறைந்த) இதர ஆழ்வார்களின் திவ்யபிரபந்தங்களையும் கண்டு கொண்டார்.

ஸ்ரீமந்நாதமுனிகள் உபதேசமாக ஆழ்வார் பாசுரங்களின் ஞானம் பெற்று திருவாய்மொழியையும், இதர ஆழ்வார்களின் பாசுரங்களையும் தொகுத்து அளித்த பிரபந்தம் நாலாயிர திவ்ய பிரபந்தம் ஆகும். (4 தொகுப்புகள் - 24 பிரபந்தங்கள்) இந்த திவ்ய பாசுரங்களை 2 முக்கிய தலைப்புகளில் வகைப் படுத்தினார்.

''பாசுரம்'' என்ற சொல்லே ''சுரமோடு கூடிய பா'' என்று பொருள்படுகிறது.

I. இசைப்பா II. இயற்பா - II பிரபந்தங்கள்

1. முதலாயிரம் - 9 பிரபந்தங்கள்
2. பெரிய திருமொழி - 3 பிரபந்தங்கள் மொத்தம் 24 பிரபந்தங்கள்
3. திருவாய்மொழி - 1 பிரபந்தம்

''இயற்பா'' என்ற தொகுதியைத் தவிர இதர 3 தொகுதிகளின் பாசுரங்கள் இசையோடு வழங்கப்பட்டன. அவைகள் நாதோபாசனைக்காக அருளப்பட்டனவே. தமிழ்ப் பண்கள் நன்கு பொருந்தி உள்ளன. ஆழ்வார்களே தங்கள் பாசுரங்களை ''இசை மாலை'' என்றே கூறியுள்ளனர். இவை ''தெய்வீக இசை'' - ''தேவகானம்'' என்றும் கொண்டாடப்படுகிறது. பண்டைக் காலத்திலிருந்தே நமது ஆன்மீக, (பக்தி) கலாசார வாழ்க்கையில் இசைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கிரந்தங்களில், எந்த வேளையில், எந்த சந்தர்ப்பத்தில், என்ன என்ன ராகம் / பண், தாளம் உபயோகிக்கப்பட வேண்டுமென்ற விபரங்கள் காணக் கிடைக்கின்றன. இவைகள் இசையோடு பாடப்பட்டவை என்பதற்கு சில அக்சான்றுகள், (உதாரணமாக) பண்களின் குறிப்புகள் கீழே காணலாம்.

### பெரியாழ்வார்

112. ''பண்பல பாடி பல்லாண்டிசைப்ப.''
263 ''பண்ணின்பம் வரப்பாடும் பத்தருள்ளார்''
334 ''பாண் தருவண்டினங்கள் பண்கள் பாடி மதுப்பருக.''

### ஆண்டாள்

476 ''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி''
478 ''தூமலர் தூவித்தொழுது வாயினால் பாடி''
574 ''பண்பல செய்கின்றாய் பாஞ்சசன்னியமே''

### குலசேகர ஆழ்வார்

680 ''பண்பகரும் வண்டினங்கள், பண்பாடும் வேங்கடத்து''
707 குலசேகரன் இன்னிசையில் மேவி சொல்லிய இன்தமிழ்மாலை''

### திருமழிசை ஆழ்வார்

778 ''பண்கடந்த தேசமேவு பாவ நாச நாதனே''

### தொண்டரடிப்பொடி ஆழ்வார்

922 ''புரவியோடாடலும் பாடலும் தேரும்''
925 ''ஏதமில் தண்ணுமை யெக்கம் மத்தளி யாழ், குழல்,
முழவமோடு இசை திசை கெழுமி கீதங்கள் பாடினர்''

திருப்பாணாழ்வார்

930 மதுரமா வண்டு பாட, மாமயிலாட....

மதுரகவி ஆழ்வார்

936 ''குருகூர்நம்பி பாவின் இன்னிசை பாடித் திரிவனே''

திருமங்கை ஆழ்வார்

936 ''அரிய வின்னிசை பாடும் நல்லடியவர்க்கு அருவினை அடையாவே''

1646 ''பண்ணினை பண்ணில் நின்றதோர் பான்மையைப் பாலுள்
நெய்யினை மாலுருவாய் நின்ற விண்ணினை''

நம்மாழ்வார்

''குருகையர்கோன்யாழிசை வேதத்தியல்''
(பட்டர் அருளிய தனியன்)

2863 ''பண்ணில் பன்னிரு நாமப்பாட்டு அண்ணல் தான் அணைவிக்குமே''

2729 ''பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும்''

2818 ''ஆடியாடி அகம் கரைந்து இசை பாடிக் கண்ணீர் மல்கி''

இராமானுச நூற்றந்தாதி

20 ''தென்குருகைப்பிரான் அமுதத் திருவாய் ஈரத்தமிழின் இசை''

64 ''பண்தரு மாறன் பசுந்தமிழ்''

ஆண்டாள் அருளிய திருப்பாவையில் 15 பாசுரங்கள் இசையைப் பற்றியவை. நம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியை சாமவேத சாரமெனச் சான்றோர்கள் கூறுகிறார்கள். சாம வேதம் போல் திருவாய்மொழி இசையுடன் பாடுவதற்கு உரியது.

சுவாமி நிகமாந்த தேசிகன்

''செய்ய தமிழ் மாலைகள் தெளிய ஓதித் தெளியாத
மறை நிலங்கள் தெளிகின்றோமே.''

ஆழ்வார்கள் அருளிய பாசுரங்கள், இசையுடன் பாடப்பட்டு வந்தன என்பது ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் மூலமே கூறப்பட்டுள்ளது. (உதாரணம் மேலே காண்க)

பரதத்துவத்தை - பாண்டியன் அரசசபையில் - நிர்ணயித்து, நிலைநிறுத்தி பொற்கிழி பெற்ற பெரிய ஆழ்வாரை பாண்டிய அரசன் யானை மீது அமர்த்தி ராஜமரியாதையுடன், பவனி வரும் சமயம், யானை கழுத்தில் உள்ள மணிகளையே தாளமாக வைத்துக் கொண்டு பல்லாண்டு பாடியதாக வரலாறு கூறுகிறது.

வைஷ்ணவத்தோடு இசையும் சேர்ந்து வளர்ந்துள்ளது என்ற கருத்து மிகையாகாது. இவை இறைவனிடத்தில் ஈடுபாடுள்ள உணர்ச்சியால் பிறந்தவை. இப்பண்களில் தெய்வ அம்சம் நிரம்பி உள்ளது. இறைவன் பண் ரூபமாக உள்ளவன் என்று சான்றோர் கூறுகிறார்கள்.

நாலுகவிப்பெருமான் என்ற விருது பெற்ற திருமங்கையாழ்வார் காலத்திலிருந்து (8வது நூற்றாண்டு) ஸ்ரீரங்கம் ஆலயத்தில் ஆழ்வார்கள் பாசுரங்களை இசையோடு பாடி அபிநயம் பிடிக்கும் வழக்கம். அதாவது ''அரையர் சேவை'' ஏற்பட்டதாக ''கோயிலொழுகு'' கூறுகிறது. இது தேவகானம் என்று போற்றப்படுகிறது.

அரசியல் குழப்பங்கள் காரணமாக அந்த சமயம் உத்ஸவங்கள் முதலியவை கோயில்களில் தடைபட்டு நின்றன. பின்னால் தோன்றிய ஸ்ரீநாதமுனிகள் அவர்களின் பெருமுயற்சியால் திரும்பவும் உத்சவங்கள் உயிர்பெற்றன. இது தேவகானம் என்று அழைக்கப்படுகிறது.

வைஷ்ணவ சமயத்திற்கும், தமிழ் இசைக்கும், பக்தி நெறியில் இத்தகைய மகத்தான தொண்டு புரிந்த ஸ்ரீமந் நாதமுனிகளை

"காளம் வலம்புரி அன்ன நற்காதல் அடியவர்க்குத்
தாளம் வழங்கிதமிழ்மறை ''இன்னிசை'' தந்த வள்ளல்''

என்று நிகமாந்த மகா தேசிகன் போற்றிப் புகழ்கிறார். அன்னார் தாளம் அமைக்கும் முன்பு தாளம் இல்லாமல் சுத்தாங்கமாக பாடப்பட்ட பாசுரங்களை ஸ்ரீநாதமுனிகள் தான் தாளத்தில் அமைத்து வழங்கினார் என்பது பிரசித்தம்.

திருவாய்மொழிக்கு மட்டும் ஆசார்ய மதுரகவிகள் முன்னமே தாளம் அமைத்துவிட்டிருக்கிறார். பண்-ராங்கள் 21 என்று கருதப்படுகிறது. திருமங்கை மன்னன் திருவரங்கம் கோயிலில் தாமே தன் பாசுரங்களுக்கு ராகம் அமைத்து பாடியதாக (கோயிலொழுகு) கூறப்படுகிறது. அவை தமிழ்நாட்டிற்கே உரிய ஒரு பழைய முறையின. தென்னாட்டு மக்கள் இசைக்கருவிகளை உபயோகிப்பதிலும், பலவித நாட்டியங்களிலும் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள்

என்று நாட்டிய சாஸ்திரம் செய்த பரதமுனிவரே (600 ஆண்டுகளுக்கு முன்) கூறியுள்ளார். பல சங்கித கிரந்தங்களும் தமிழில் இருந்தன.

தமிழ் இராகங்கள் (பண்) 103 என்று சொல்லப்படுகிறது ஆனால் திருவாய்மொழியிலும் பெரிய திருமொழியிலும் காணப்படும் பண்கள் 28 மட்டும்தான்.

இவற்றுள் 18 பண்கள் இரண்டிற்கும் (திருவாய்மொழி - பெரிய திருமொழி) பொது. திருவாய்மொழிக்கு சிறப்பாக உரியன மூன்று பண்கள். பெரிய திருமொழியில் மட்டும் காணப்படும் பண்கள் ஏழு. (அனுபந்தம் காண்கவும்) தமிழ் ராகங்களில் (பண்) அடிப்படையானது. ''முல்லையாழ்.'' முல்லையாழ் வடமுறை அரிகாம்போதியே ஆகும். (பஞ்சமரபு - சுந்தரம் வீ.ப.க. உரை (1991), இந்த ராகங்களின் அடிப்படையில் முல்லைக் கடவுளான ''மாயோன்'' என்றும் அறிகிறோம். அரியே (ஹரி) ஒரு இனிய அம்சம். நாட்டியம் சைவத்திற்குச் சிறப்புடைமை. அதேபோல் கானம் வைணவத்தின் உடமை ஆகும் என்று சான்றோர்கள் பகருகிறார்கள். வேணுகானமே (முரளீதரன் / கண்ணன்) முதல் கானம். அரிகாம்போதியைத் தவிர வேறு இராகங்களுக்கும் தமிழில் இணையான இராகங்கள் உள்ளன. ''படுமலைப் பாலை''யைச் ''சங்கராபரணத்திற்கும், ''குறிஞ்சி''யை ''நடபைரவி''க்கும் ஒப்பிடலாம்.

இசையில் ''ஸ்ருதி'' என்பதே உயிர்நாடி. எவ்வளவு நேரம் ஒலிக்க வேண்டும் என்ற அளவுக் கட்டுப்பாட்டைத் தான். 'லயம்' என்று சொல்லுகிறோம். தாளத்தால் இந்தக் கட்டுப்பாடு செய்யப்படுவதால் இதற்கு ''தாளக்கட்டு'' என்ற பெயரும் உண்டு. ''ஸ்ருதி மாதா, லய பிதா'' என்ற தொடர் கவனிக்கத்தக்கது.

''தாளம்'' (திருவாய்மொழியில்) ''ஒத்து'' எனவும் தமிழில் பெயரிடப்பட்டுள்ளது. திருவாய்மொழியிலும், பெரிய திருமொழியிலும் மொத்தம் ஏழு தாளவகைகள் உண்டு. இவற்றில் ஏழொத்தே - ஆதி தாளம் போல் மிகுதியாய் வழங்குவது.

தமிழில் இராகவகைகள் (பண்) 103.

தாள வகைகள் (ஒத்து) 103 என வகைப்படுத்திக் கூறப்படுகிறது. பின்னாளில் தேவாரப்பாடல்களை முறைப்படுத்திய நம்பியாண்டார் நம்பிகள் ஒவ்வொரு நாயன்மார்களுடைய அருளிச் செயல்களையும் பண் முறையில் முறைப்படுத்தினர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமான பக்திப்பாடல்களைப் பாடும் ''சம்பிரதாயம்'' மாறாமல் ''மரபு'' இன்றும் பலரால் கையாளப்பட்டு வருகிறது.

''பண்'' - ''ஒத்து'' ஆகியவைகள் ''வைணவ - சைவ'' ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

ஆழ்வார் பாசுரங்கள் மேலும் நாயன்மார்களின் பாடல்களைக் கொண்டு வைணவ - சைவ ஒருமைப்பாட்டு உணர்வுகளின் நுட்பங்களையும், பக்தி நெறியின் தெய்வீகத்தன்மையையும், பண்ணின் சுவையையும் அனுபவிக்கிறோம்.

வைணவ ஆழ்வார்களும், நாயன்மார்களும் - (சைவம்) சமயாசாரியர்களும் நமது நாட்டின் பரம் பரையான பக்தி நெறி, தொண்டு (கைங்கர்யம்), ஆன்மீகம், தெய்வீகம் முதலியன மணக்கும், பாரதீய கலாசார ஒருமைப்பாட்டை தெய்வீகத் தமிழில் தெளிவாக விளக்கி, நல்வழிகாட்டி நடத்திச் செல்கிறார்கள். தற்சமயத்திலும் இசையில் பிரபந்தங்களை பாடுவது வழக்கத்திலுள்ளது. கடவுள் நம்மை இந்த புனித கைங்கர்யத்தில் ஈடுபடுத்திக் காப்பாற்றி அருள்பாலிக்கிறார்.

### அனுபந்தம்

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திலுள்ள
தமிழ்ப் பண்கள்
பொதுப்பண்கள் - 18

| | | | |
|---|---|---|---|
| 1. | இந்தளம் | 10. | நாட்டம் |
| 2. | காந்தாரம் | 11. | பஞ்சமம் |
| 3. | (சீ) காமரம் | 12. | பழஞ்சுரம் |
| 4. | குறிஞ்சி | 13. | பழந்தக்கராகம் |
| 5. | கொல்லி | 14. | பழம் பஞ்சுரம் |
| 6. | தக்கராகம் | 15. | பாலை யாழ் |
| 7. | தக்கேசி | 16. | புறநீர்மை |
| 8. | நட்டபாடை | 17. | முதிர்ந்த குறிஞ்சி |
| 9. | நட்டராகம் | 18. | வியந்தம் |

பெரிய திருமொழியில் மட்டும் - 7

| | | | |
|---|---|---|---|
| 19. | அந்தாளி | 23. | பஞ்சுரம் |
| 20. | கல்வாணம் | | |
| 21. | குறண்டி | 24. | பியந்தை |
| 22. | நைவளம் | 25. | வியாழக் குறிஞ்சி |

திருவாய்மொழியில் மட்டும் - 3

26. கவுசிகம்
27. செருந்தி
28. முதிர்ந்த இந்தளம்

குறிப்பு :

1. 1-25 பெரிய திருமொழிப் பண்கள்
2. 1-18 & 26-28 ஆகிய 21-உம் திருவாய் மொழியின.
3. திருவாய்மொழிப் பண்களுக்கு இடையொத்து, நடையொத்து, ஏழொத்து, ஒன்பதொத்து என நான்கு வகை தாளங்கள் கொள்ளப்பட்டன.

# ஆஞ்சநேயர் ஜெயந்தி

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

திரேதாயுகத்தில் 'கேசரி' என்பவன் இருந்தான். அவனுக்கு வெகு காலமாகப் புத்திர பாக்கியம் ஏற்படவில்லை. பிள்ளை இல்லாத குறை நீங்க கேசரி, சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்யத்துவங்கினான்.

கேசரி, அன்ன ஆகாராதிகளை விட்டுக் காட்டிலே கிடைக்கும் பழம் கிழங்குகளை மட்டுமே உண்டு பரமனைத் தியானித்து வந்தான். சில காலம் சென்றது; மரத்திலிருந்து தானே உதிர்ந்த சருகுகளை ஆகாரமாகக் கொண்டான். சில நாட்கள் சென்றது; அதையும் விட்டு விட்டுத் தண்ணீரை மட்டுமே காலையிலும், மாலையிலும் அருந்திவந்தான். கொஞ்ச காலம் சென்றது; ஈசன் அருளவில்லையாதலால் தண்ணீர் அருந்துவதையும் கைவிட்டான். காற்றையே உணவாகக் கொண்டு ஏகாக்கிரசித்தத்துடன் ஈசனை தியானித்தான்.

கைலாச நாதன் பக்தன் மீது கருணை கொண்டு அவன் முன் தோன்றினார். ''அன்பனே! உனக்கு வேண்டியது என்ன? கேள், தருகிறேன்'' என்றார்.

ஈசனைக்கண்ட கேசரி மகிழ்ச்சிப்பெருக்கால் அவரைப் போற்றி வணங்கினான்.'' பிரபோ! என் வம்சம் என்னோடு அழிந்துவிட வேண்டியது தானா? பூர்வத்தில் நான் எப்பேர்ப்பட்ட பாவ காரியத்தைச் செய்திருந்தாலும் அதை மன்னித்து, எனக்குப் பிறக்கும் புத்திரன் பலசாலியாகவும், எவராலும் ஜெயிக்க முடியாதவனாகவும், மரணமே இல்லாதவனாகவும் இருக்க அருள வேண்டும்'', என்று வரம் கேட்டான்.

அதற்கு ஈசனும், ''அன்பனே! இப்பிறவியில் உனக்குப் புத்திரபாக்கியம் கிடையாது. என்னைக் குறித்துத் தவம் இயற்றியது வீண் போகக் கூடாது. ஆகவே உனக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கும், அந்தப்பெண்ணுக்கு நீ கோரியபடி மைந்தன் பிறப்பான்'' என்று அனுக்கிரகித்து மறைந்தார்.

பகவானின் அனுக்கிரகத்தில் கேசரியின் மனைவி விரைவிலேயே கருவுற்று ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். கேசரியின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பகவானுடைய கருணையை எண்ணி எண்ணி ஆனந்தம் கொண்டான். அந்தக் குழந்தைக்கு அஞ்சனை என்று பெயரிட்டனர் பெற்றோர்கள்.

அஞ்சனை வளர்ந்து பருவத்தை அடைந்தாள். அவள் உள்ளம் இயற்கையை ரசிப்பதிலேயே சென்றது. ஒரு நாள் அஞ்சனை சோலையில் ஆடிப் பாடி திரிந்துகொண்டிருக்கையில் வானரவீரன் ஒருவன் அவளைப் பார்த்தான். அவளை மணக்க வேண்டும் என்று, கேசரியைச் சந்தித்து தன் விருப்பத்தைக்கூறினான்.

வானர வீரனைக்கண்ட கேசரி, அவன் கம்பீரத் தோற்றத்தைப் பாராட்டினான். தன் மகளுக்கு ஏற்ற வரன் அவனே எனத் தீர்மானித்தான். அஞ்சனையை அழைத்து, அவள் விருப்பத்தைக் கேட்ட போது, அவளும் தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். அஞ்சனைக்கும் வானர வீரனுக்கும் திருமணம் நடைபெற்றது.

அஞ்சனை கணவனுடன் ஆனந்தமாக வாழ்க்கை நடத்திவந்தாள். காலம் உருண்டோடியது. கேசரி தன் மனதில் மட்டும் ஈசன் கூறியது நிறைவேறும் என்ற மன உறுதியுடன் இருந்துவந்தான். ஆனால் அஞ்சனையால் அவ்வாறு இருக்க இயலவில்லை. மனம் மிகவும் வருந்தலானாள்.

ஈசன் சொன்ன வாக்கு பொய்த்துவிடுமா என்ன? தரும தேவதை அஞ்சனையைத் தேடிப் புறப்பட்டாள்! குறத்தியாகத் தெருவாசலில் வந்து நின்றாள்!

குறத்தியைக் கண்ட தோழிகள், அஞ்சனையின் கவலை நீங்கக் குறிகேட்கலாம் என்று அஞ்சனையை அழைத்து வந்தனர். கையைப்பார்த்த குறத்தி, அவளுடைய கையைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டாள். இதைக் கண்ட அஞ்சனை ''இதென்ன''? என்று கேட்டாள்.

''தாயே! உங்களை வாட்டி வரும் குறை, நீங்கும் காலம் அண்மையில் தான் இருக்கிறது! புத்திரபாக்கியம் அண்மையில் தான் இருக்கிறது. அதற்கு ஒரு சிறு காரியம் செய்ய வேண்டும். வேங்கடமலைக்குச் சென்று, பரந்தாமனைக் குறித்து தியானம் செய்: அவன் அருளால் விண்ணவரும் போற்றிக் கொண்டாடும் பிள்ளை பிறப்பான்.

அவனால் உன் பெயர் விளங்கப் போகிறது. இது சத்தியம்'' என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அஞ்சனை மிகுந்த மகிழ்ச்சி அடைந்தவளாக, உள்ளே சென்று கைநிறைய பொன்னும் மணியும் அள்ளிக்கொண்டு வந்து, குறத்தியிடம் கொடுத்தாள். கணவனிடம் சென்று, குறத்தி சொன்னதைச் சொல்லி திரு வேங்கடம் செல்ல அனுமதி கேட்டாள். அவனும் மகிழ்ச்சியோடு அனுமதி கொடுத்தான். அஞ்சனை கணவனை வணங்கி ஆசி பெற்று திருமலைக்குப் புறப்பட்டாள்.

ஆகாசகங்கையில் நீராடி, அதன் கரைகளில், ஐம்புலன்களையும் அடக்கித் தவம் செய்யலானாள் அஞ்சனா தேவி. ஊன் உறக்கத்தையும் மறந்தாள். காற்றுதான் ஆகாரம். வெய்யிலோ, மழையோ, காற்றோ, பனியோ எதைப்பற்றியும் கவலைப் படாது பரந்தாமனைத் தியானித்து வந்தாள். அவளுடைய கடுமையான கட்டுப்பாடுகளின் காரணமாக அவளிடமிருந்து காந்தி வீசியது.

அஞ்சனா தேவியின் கடுமையான விரதத்தை கண்டு வாயு தேவன் பேராச்சரியம் கொண்டான். காற்றை மட்டுமே உணவாகக் கொண்டு, பகவத் தியானத்தில் ஈடுபட்டுள்ள அவளுக்கு தன்னாலான உதவி செய்ய விரும்பினார். வனத்தில், மரங்களிலிருந்து நன்கு கனிந்த பழம் ஒன்றைத் தினமும் கொண்டுவந்து அஞ்சனையின் கரங்களில் போட்டு வந்தான். முயற்சி ஏதுமின்றி தானே வந்து விழுந்த பழத்தைக் கண்டு பகவானுடைய அனுக்கிரகமே என்று மகிழ்ந்து அதைத் தினமும் அவள் சாப்பிட்டு வந்தாள்.

இந்த விதமாக அஞ்சனை பரந்தாமனை தினமும் தியானித்து வரும்போது ஒரு சமயம் ஈசன் தேவியுடன் அந்த வனத்திற்கு வந்து, மகிழ்ந்திருந்தார். அப்போது ஒரு மரக்கிளையில் ஆணும் பெண்ணுமாக இரண்டு குரங்குகள் கூடிக் களித்திருப்பதைக் கண்டார் ஈசன். தானும் தேவியுடன் அவ்வாறு மகிழ்ந்திருக்க எண்ணம் கொண்டார். ஈசனுடைய விருப்பத்தை அறிந்த தேவி, அதற்குத் தானும் இசைவு தெரிவித்தாள். இருவரும் மந்திகளாக மாறி கிளைகளில் தாவி இன்புற்றனர். அப்போது ஈசனிடமிருந்து தேஜஸ் வெளிப்பட்டது. அது வீணாகக்கூடாது என்று வாயுதேவன் அதைப் பணிவோடு ஏந்திவந்து, தியானத்திலிருந்த அஞ்சனையின் கரங்களில் விழச்செய்தான். கண் மூடி தியானத்திலிருந்த அஞ்சனை, அது என்னவென்று பார்க்கவில்லை; பகவானுடைய அனுக்கிரகத்தால் வழக்கமாக வந்து விழும் கனியாக எண்ணிப் புசித்துவிட்டாள்.

நாட்கள் பல சென்றன. அஞ்சனாவின் திரு வயிற்றில் மகேசுவரனுடைய 'கரு' வளர்ந்து வரலாயிற்று. ஒரு நாள் அவள் தன் உடலில் ஏற்பட்டிருந்த மாறுதலைக் கண்டு திடுக்கிட்டாள். தான் கருவுற்றிருப்பதை உணர்ந்தபோது, அவள் பேரதிர்ச்சி அடைந்தாள். மிக்க நியம நிஷ்டைகளோடு பகவானைத் தியானித்து வந்த தான் இந்த நிலைக்கு உள்ளானது எவ்வாறு என்பதை அறிய முடியாமல் தவித்தாள். தான், இத்தனை நாட்கள் பட்டு வந்த சிரமமும், தன் குலத்துக்கே பெரும் அபவாதம் ஏற்பட்டது தன்னால்தான் என்றும், இனி தன் கணவனின் முகத்தில் விழிக்க முடியாத நிலை தனக்கு வந்து விட்டதை எண்ணி துக்கித்தாள். கண்கள் நீரைப் பெருக்க, இனி உயிரோடு கணவரிடம் திரும்ப விரும்பாமல் உயிரை மாய்த்துக் கொள்வது ஒன்றுதான் சரியான மார்க்கமாகத்தோன்றியது. அப்போது 'அஞ்சனா' என்று ஒரு குரல் அழைத்தது! திடுக்கிட்டு, தன்னை அழைத்தது யார் என்ற நாற்புறமும் பார்த்தாள்? அப்போது அந்தக் குரல், அவளை மீண்டும் அழைத்து! வானிலிருந்து அந்தக் குரல் அழைப்பதைக் கேட்டதும் அவள் மேனி சிலிர்த்தது. இரு கைகளையும் தலைக்கு மேலே தூக்கி, 'பகவானே'' என்று உணர்ச்சி பரவசத்தில் வேண்டினாள்.

''அஞ்சனா! துயரம் கொள்ள வேண்டாம். உன் வயிற்றில் உருவாகி வரும் 'கரு' மகேச்வரனுடையது. அதனால் நீ பெருமைப்படலாம். உனக்குப் பிறக்கப் போகும் பிள்ளை எப்பேர்ப்பட்டவன் தெரியுமா? வாயு தேவனுடைய சம்பந்தத்தால் அவன் மிகுந்த பராக்கிரமசாலியாக, காற்றைப் போல் சஞ்சரிக்கும் சக்தி வாய்ந்தவனாக விளங்குவான். சூரிய குலத்தில் ஸ்ரீமந்நாராயணன் இராமனாய் அவதரித்து, 'துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனார்த்தம்' செய்ய வனத்துக்கு வருவார். அவருக்குச் சேவை செய்து, அவருடைய திருவடிகளைத் தாங்கும் பேற்றினை உன் குமாரன் அடைவான். விண்ணவரும் அவனைக் கொண்டாடுவார்கள்,'' இவ்வாறு அசரீரி கூறியதைக் கேட்டதும் அஞ்சனையின் மனதில் ஏற்பட்டிருந்த கலக்கமும், துயரமும் மறைந்தன. குதூகலத்தோடு இல்லம் திரும்பி, நடந்ததை கணவனிடம் தெரிவித்தாள். வெகுகாலமாக ஏங்கிக்கொண்டிருந்த குமாரன் பிறக்கப் போகிறான் என்பதைக் கேட்டவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள்.

காலக்கிரமத்தில் அஞ்சனை அழகிய ஆண் குழந்தைக்குத் தாயானாள். ஈசனும் தேவியும் மந்திகளாக உருவம் எடுத்து மகிழ்ந்திருந்த காரணத்தால் அந்தக் குழந்தையும் வானர சிசுவாக இருந்தது.

அஞ்சனா தேவியின் மகன் என்று பொருள்பட ஆஞ்சநேயன் என்று பெயரிட்டு வளர்த்து வர லானார்கள்.

## ஆஞ்சநேயரின் மூலப்பெயர் சுந்தரன்

இராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் அறிமுகமாகிறார் அனுமார். சுந்தரகாண்டத்தில் இடம் பெற்று, யுத்த காண்டத்தில் மகாவீரனாகவும், அறிவில் சிறந்த தூதுவனாகவும் விளங்குகிறார். உத்தர காண்டத்தில் லவகுசர்களை இணைத்து வைக்கும் தொண்டனாகிறார்; சீதாப்பிராட்டியாருக்கு அசோக வனத்தில் ஆறுதல் கூறும் அன்புத்தூதுவனாகி, பிராட்டியாரின் மனம் தேறச் செய்தவர் அனுமான். சஞ்சீவினிக்கு உயிர் காக்கும் வல்லமை உண்டு. யுத்த காண்டத்தில் லட்சுமணனைக் காப்பாற்றும் அனுமன், உத்தரகாண்டத்தில் பரதசத்ருக்னர்களையும் காப்பாற்றுவதாக ராமாயணம் கூறுகிறது.

அனுமானைப் பார்த்தபின் சீதாப்பிராட்டியாரின் கவலைகள் நீங்கி விடுவது சுந்தரகாண்டத்தில் வருணிக்கப்படுகிறது. அதனால் சுந்தர காண்டத்தை, ஆஞ்சநேயபக்தர்கள், பக்தியுடன் படிப்பவர்களுக்கு மன நிம்மதி கிட்டும் என்பார்கள்.

நம்பியவர்களுக்கு அன்றும் - இன்றும் - என்றும்' அருள் பாலிக்கின்ற ஆஞ்சநேயர், சேதுவில் சில காலமும், இமயத்தில் சில காலமும் இருந்த பின், இப்பொழுது திருமலையில் திருவேங்கடவனாக உள்ள இராம பிரானுக்கு எதிரில் அமர்ந்துள்ளார். திருமலையில், ஆஞ்சநேயரை தரிசித்த பின்பே திருவேங்கடவனை தரிசிக்கச் செல்லுதல் இன்றும் வழக்கம்.

திருமலையில் அஞ்சனாதேவி தவம் செய்த 'அஞ்சனாத்ரி' என்ற மலையும் உள்ளது. அங்கு ஆஞ்சநேயர் தாயையும், பெருமாளையும் வழிபட்டு பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றாலும் சிறப்புற்று விளங்கும் ஆஞ்சநேயர் மிக்க நாநயம் உள்ளவர். எனவேதான் அவர் 'ராமதூதராகச் செயல் பட முடிந்தது.

ஆஞ்சநேயர், பிறப்பால் விலங்கு; பண்பால் மனிதர்; ஆற்றலால் சித்தர்; அறிவால் ஞானி, அன்பு, அருள், அமைதி, பொறுமை ஆகியவற்றால் தெய்வம்!

அஞ்சனையின் மைந்தனாகப் பிறந்ததால் ஆஞ்சநேயன் எனவும், மருதம் காற்று பெற்றெடுத்ததால் 'மாருதி' எனவும், வற்றிய கன்னங்களை உடையதால் 'அனுமன்' எனவும், வாசனையுள்ள சஞ்சீவி மலையைத் தாங்கிப் பறந்ததால் 'கந்த வாஹாத்மஜ' எனவும் வாயு குமாரன் அழைக்கப் பட்டார்.

சூரியனால் கலைகளைப் பயிற்றுவிக்கப்பட்டவர். உடலால் வானரமானாலும், சூரியனது சுழல் கதிருக்கும், வேகத்துக்கும் ஈடு கொடுத்து சூரியனிடம் பாடம் கற்றவர்.

யோகபலம், தேகபலம், வாக்குபலம் ஆகியவற்றைப் பெருமளவில் கொண்ட அனுமான் பெரும் சித்தாற்றல் கொண்ட சித்தராகவும் திகழ்ந்தவர்.

அணிமா என்னும் சித்தாற்றலால் தன் உருவத்தை சுருக்கிக்கொள்ளும் திறன் கொண்டவர். 'மகிமா' என்னும் சித்தாற்றலால் 'விசுவரூபம்' எடுக்கும் சக்தி படைத்தவர். 'லகிமா' என்னும் சித்தினால் சஞ்சீவி மலையைக் கொண்டுவந்த போதும், கடலைக் கடந்தபோதும், தன் உடலைக் கனமற்றதாகச் செய்து கொண்டவர். 'பிராத்தி' என்னும் சித்தாற்றலால் வானர வடிவம் நீக்கி 'மாணியாம் வடிவந்'தாங்கி, மாணவனாக ராமலக்ஷ்மணரைக் கண்டவர். 'வசித்துவம்' என்ற சித்தினால், அசோக வனத்தில் அரக்கியரை உறங்கச் செய்தவர்.

வேத கால நூல்களிலேயே ஆஞ்சநேயர் என்று பெயரைக் குறிப்பிடாமல், அபாரசக்தி கொண்ட வானர தேவனைப் பற்றிய குறிப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ரிக் வேதத்தில் பத்தாவது காண்டத்தில் இந்த தேவனை, 'விருஷகபி' எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒரு முறை இந்திராணி தனது அபிஷேக திரவியமான நெய்யை, வானரதேவன் கெடுத்து விட்டதாக இந்திரனிடம் முறையிடுகிறாள். இந்திரனும், வானரதேவன் தனது மகன் என்று கூறி, அவனுடைய அகன்ற மார்பையும், திரண்ட தோளையும், அழகான கைகளையும், எழில் மிகுந்த சிகையையும் வருணித்து, இந்திராணியை சமாதானப் படுத்துகிறான்.

'அனுமான் சாலிஸா' என்ற நூல், எட்டு சித்திகளையும், நவநிதிகளையும் அவர் அருளக் கூடியவர் என்று கூறுகிறது.

'ஜெயின் ராமாயணம்' என்ற நூலில், அதில் அனுமன் தேவியர் உள்ளவராக வருணிக்கப்படுவதாக உள்ளது.

'பாஸமகாகவியின்' காலத்திலிருந்து அனுமானைப் பற்றிய சரித்திரம் மேடையில் நாடகமாக நடிக்கப்படுகிறது. பொம்மலாட்டத்திலும் இடம் பெறுகிறது. ஆனால் வட இந்தியாவில் அனுமான் முக்கியமாக இடம் பெறுவது. 'ராம

லீலாவில்தான். அந்த விழாவின்போது தோன்றும் அநுமனை, ''போலோஸ்ரீ அனுமான் கி ஜெய்'' என்று முழங்கி மக்கள் வரவேற்கிறார்கள்.

'அஞ்சனா நந்ததீரம் அசோகவன சஞ்சாரம்

வந்தே லங்கா பயங்கரம் சீதா சோக விநாசகரம்'!

எனப்பாடப்பெற்ற மாருதி, எங்கெல்லாம் ராமகதை கூறப்படுகின்றதோ அங்கெல்லாம் இருப்பார்; பக்தருக்கு அருள்வதில் தன்னிகரற்றவர்.

அஞ்சனையின் மகனான ஆஞ்சநேயரின் மூலப்பெயர் 'சுந்தரன்'. வால்மீகி முனிவரும் அனுமன் வரலாறு கூறும் காண்டத்திற்கு 'சுந்தர காண்டம்' என்று அவர் பெயரையே சூட்டினார்.

## அனுமத் ஜெயந்தி

மார்கழி மாத அமாவாசை 'அனுமத் ஜயந்தி' ஆகும். ஆஞ்சநேயர் பிறந்த தினமான அன்று வீடு களில் படம் இருப்பின் சந்தனம் குங்குமம் இட்டு மலர்மாலை அணிவித்து, வடைமாலை சாத்தி, வெண்ணையும் சாத்தி, பாயசம் நிவேதித்துப் பூஜிக்க லாம். 'துளசி', பூஜைக்கு அவசியம்.

கோவில்களில் விசேஷ ஆராதனைகளுடன் வெண்ணைக்காப்பு, குங்குமக்காப்பு, வடைமாலை என்று பல விதங்களில் அலங்கரிப்பார்கள். ராம பஜனை செய்து மகிழ்வார்கள்.

''பிள்ளையார் பிடிக்க அது குரங்காயிற்று என்பார்கள். 'சீதா கல்யாணம், ராதா கல்யாணம், ருக்மணி கல்யாணம்' போன்ற விசேஷங்களில் முதலில் பிள்ளையார் பூஜையும், கடைசியில் அனுமார் பூஜையுமாக செய்து முடிப்பதற்கே இப் படிச் சொல்வதாகும்; என்று பெரியவர்கள் சொல்லக் கேட்கலாம்.

மேலும், வியாசர் மகாபாரத ஸ்லோகம் எழுத விநாயகரைக் கேட்க, விநாயகரும் தான் எழுதும் வேகம் உங்களால் சொல்ல முடியுமா என்று கேட்க, வியாசர் தான் சொல்லும் வேகம் உங்களால் எழுத முடியுமா என்று இருவரின் போட்டி யில் நமக்குக் கிடைத்ததுதான் மகாபாரத இதிகாச மாகும்.

மகாபாரதப் போர் முடிவடைந்ததும், அர்ஜுனனை முதலில் தேரிலிருந்து இறங்கச் சொல்லிய கிருஷ்ணர், அதன் பின் அவர் இறங்கியவுடன், தேர்க்கொடியில் இருந்த அனுமார் கொடியுடன் மறைந்தார்; அதன்பின் தேர் 'தீ' பிடித்து எரிந்தது.

மகாபாரதம் விநாயகரால் ஆரம்பிக்கப் பட்டு, அனுமாரால் முடித்து வைக்கப்பட்டது. இதையே பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்தது என்பதாக அறிஞர்கள் கருதுகிறார்கள்.

வீடுகளில் பூஜையில் வைக்கப்பட்டிருக்கும் ஆஞ்சநேயர் படங்களிலும் அவர் சாந்நித்தியம் கொண்டு விளங்குகிறார்.

சாதாரணமாக ஆஞ்சநேயர் படம் தனியாக வைத்திருப்பது என்பது சுபரூபம்தான். பட்டாபிஷேகத் துடன் இருப்பதைத்தான் வைப்பது வழக்கம். தனி ஆஞ்சநேயர் இருப்பின் உக்ரகம் அதிகம் என்று சொல்வதுண்டு. ஆனால் காஞ்சி காமகோடி மடத்தின் மூலம், கை கூப்பி, வாலை உயர்த்தியிருக்கும் வண்ணம் உள்ள ஆஞ்சநேயர் படம் வீட்டில் பூஜை செய்யலாம் என்று சொல்லியதில் யாவரும் பூஜிக் கின்றனர். நியமப்படி, 48 நாள் சந்தனம் குங்குமம் பொட்டு வைத்து, பூஜித்து, 48-வது நாள் 48 வடை கள் சாத்தி பூர்த்தி செய்கின்றனர். கற்பூரம் ஏற்றுவ தாகச் சொல்லிக்கொண்டாலே காரிய பலிதம் ஏற்படுகிறது.

மொத்தத்தில் ஆசாரம் சற்று அவசியம்; நித்ய பிரம்மச்சாரியான அனுமனுக்கு. இளம் தம்பதி யினர், வீட்டு விலக்கு ஆகிறவர்கள் என்று சுத்தமாக இருத்தல் வேண்டும். பெண்களும் பூஜை செய்யலாம் என்று உள்ளது.

தொலைந்துபோன பொருள் கிடைக்கவும், கிடைக்காது என்று நினைக்கும் சிறு பொருள்கள் முதல் ஆபீஸ் தஸ்தாவேஜுகள் வரை கிடைத்த அதிசயத்தையும், ஆஞ்சநேயரை வழிபட அவரால் நிகழும் அற்புதங்களை அனுபவத்தால்தான் அறிய முடியும். வார்த்தைகளால் எடுத்துச் சொன்னால் அதற்கு ஓர் எல்லை இருப்பதாகத் தெரியவில்லை.


அவர் புகழ் பாட 'சுந்தரகாண்டம்' ஒன்று போதுமே! அதில் அவருடைய வீரம், தீரம், சாதுர்யம், பலம், பராக்கிரமம் என்று சொல்லிக் கொண்டே போகலாம். அத்தனையையும் படிக்கப்படிக்க, கேட்கக் கேட்க மனம் பூரித்து, உடல் சிலிர்த்து புளகாங்கிதம் அடைவதை அனுபவத்தால்தான் அறிய முடியும்.

அஞ்சனையின் புத்திரனும், ஹனுமான், ஆஞ்சநேயன், மாருதி என்ற பல பெயர்களைக் கொண்ட வாயுபுத்திரனை, பல வெற்றிகளை அடைய, அவரது அருள் வேண்டி பிரார்த்திப்போ மாக....!

வாயு வேகத்துடனும், மனோ வேகத்துடனும் அவரது அருளைப் பெறுவோமாக....!!

***

ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருப்பழநி



# மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



புத்தாண்டு புலர்கின்ற பொன்னாளில், தமிழ்நாட்டில் மக்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துக்கள். இன்று பிறக்கும் 2003-ஆம் ஆண்டில், நாடு செழிக்கட்டும்! நலங்கள் கொழிக்கட்டும்!

கடந்த ஆண்டில் ஒவ்வொரு துறையிலும் நாம் சாதித்திருக்கிறோம். ஆனாலும், அந்தச் சாதனைகள் போதாது. நாம் சாதிக்க வேண்டியவை இன்னும் அநேகம்.

தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்க, பல்வேறு துறைகளிலும் முன்னேற்ற நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

வறட்சி, நிதிப் பற்றாக்குறை ஆகிய இடர்ப்பாடுகள் நம்மைப் பின்னுக்கு இழுத்தாலும், ஊக்கத்தாலும், உள்ளத்தின் உறுதியாலும், உள்ளார்ந்த ஈடுபாட்டாலும் நாம் முன்னேறி வருகிறோம்.

புத்தாண்டில் புதிய கடமைகள் நம்மை அழைக்கின்றன. புதிய கடமைகள் நம்மை அழைக்கின்றபோது, புதிய சவால்கள் நம்மை எதிர்கொள்ளும். புதிய சவால்கள் நம்மை எதிர்கொள்ளும்போது, புதிய சக்திகள் நமக்குள் பிறக்கும். புதிய சக்திகள் நமக்குள் பிறக்கையில், புதிய வெற்றிகளைப் பெற்றே தீருவோம்.

மக்கள் முகத்தில் புது மலர்ச்சியையும், துறை தோறும் புது வளர்ச்சியையும், மாநிலத்தில் புது வளர்ச்சியையும், மாநிலத்தில் புது எழுச்சியையும், இந்தப் புத்தாண்டில் உருவாக்க, நாம் அனைவரும் இந்நாளில் உறுதி கொள்வோம். என் அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும், என் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை மீண்டும் உரித்தாக்கிக் கொள்வதில் பெரிதும் உவகை கொள்கிறேன்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.